# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30 ரூபா

சுடர் 35 கதிர் 02 கார்த்திகை 12ஆம் நாள் வியாழக்கிழமை 28 நவம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


# எழுச்சியுடன் தாயகத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி

## துயிலும் இல்லங்களில் திரண்டு மக்கள் கதறியழுது நினைவேந்தல்



யாழ்ப்பாணம், நவம்பர் 28

தம் மக்களின் உரிமைக்காக விடுதலைக்காக தம் உயிர்களை ஆகுதியாக்கி யவர்களை - மாவீரர்களை - உறவுகளை நினைவு கூர்ந்து தாயக தேசத்தில் பேரெழுச்சியுடன் மாவீரர் தினம் உணர்வுபூர்வமாக நேற்று கடைப் பிடிக்கப்பட்டது. 24

### ஈகச் சுடரேற்றும்போது துயிலும் இல்லப் பாடல்

யாழ்ப்பாணம், நவ. 28

'தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேளைகளே..' என்ற, தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லப் பாடல், ஈகச் சுடரேற்றலைத் தொடர்ந்து துயிலும் இல்லங்களிலும் ஒலிக்க விடப்பட்டது. இதன் போது மாவீரர் கல்லறைக்கு 24

### எக்னெலிகொட வழக்கின் பிரதிவாதிகளுக்கு பிணை

கொழும்பு, நவ. 28

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிராக கொழும்பு சிறப்பு மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, 9 பேருக்கு எதிராக இந்த குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டதுடன், சந்தேக நபர்கள் பிணையில் விடுவி க்கப்பட்டுள்ளனர்.

கிரிதலே இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாக' 02

### இன்று புதுடில்லிக்கு பறக்கிறார் கோத்தா

கொழும்பு, நவ.28

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச இன்று நண்பகல் இரண்டு நர்ள் அரசமுறைப் பயணமாக இந்தியா செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தில் அவர் இந்திய அரச தலைவர் ராம்நாத் கோவிந்த்தை சந்திக்கவுள்ளதுடன், இந்தியத் தலைமை அமைச்சருடன் இருதரப்பு கலந்துரையாடலிலும் ஈடுபடவுள்ளார். 24

### திலீபன் தூபி அருகிலும் மாவீரர் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், நவ. 28

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி முன்பாக மாவீரர் நாள் நினைவேந்தல் நேற்றுக் காலையும் கடைப் பிடிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இது நடைபெற்றது. மாவீரர்களுக்குப் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை, எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் கோப்பாய், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, கொடிகாமம் உள்ளிட்ட பல இடங்களில் மாவீரர் நினைவேந்தல் நேற்று நடத்தப்பட்டது.

சில இடங்களில் பாதுகாப்புத் தரப்பினர் நினைவேந்தலுக்குத் தடை ஏற்படுத்தியபோதும், நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-த-க-ரி1,37)

## யாழ்ப்பாணம் பல்கலையில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ.28

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்குள் மாணவர்கள் நுழைவதற்கு நிர்வாகம் தடை விதித்திருந்தபோதும், நேற்று மாவீரர் நினைவேந்தலை மாணவர்கள் முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் உள்ள நினைவுத் தூபியில் நினைவேந்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாணவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

எனினும் பல்கலைக் கழக வளாகத்துக்குள் நேற்றுமுன் 24

## ராஜாங்க, பிரதி அமைச்சர்களில் தமிழர், முஸ்லிம் எவருமில்லை

கொழும்பு, நவ. 28

புதிய இடைக்கால அரசின் இராஜாங்க அமைச்சர்களாக 35 பேரும், பிரதி அமைச்சர்களாக 3 பேரும் நேற்றுப் பதவியேற்றனர். இந்த அமைச்சர் குழாமில் தமிழ் பேசும் எவரும் நியமிக்கப்படவில்லை.

அரச தலைவர் செயலகத்தில், அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச முன்னிலையில் 24

## நினைவேந்திய மக்களுக்கு சிலஇடங்களில்அச்சுறுத்தல்

யாழ்ப்பாண்ம, நவ.28

வடமராட்சி தீருவில் பொது மைதானத்திலும், பருத்தித்துறை முனைப் பகுதியிலும் நேற்று முன்னெடுக்கப்பட்ட மாவீரர் நினைவேந்தலுக்குப் பொலிஸார் இடையூறு விளைத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தீருவிலில் நினைவேந்தலுக்குச் சென்ற மக்கள் அனைவரும் பொலிஸாரால் சோதனைக்குட்படுத்தப்பட்டனர் என்றும், 02

## வரிச்சீர் திருத்தங்களை அறிவித்தது புதிய அரசு

கொழும்பு, நவ.28

வரிச் சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவித்த அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன அவை உடனடியாக நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவித்தார்.

புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தலைமையில் கூடியது. அதிலேயே வரிச் சீர்திருத்தம் தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

பெறுமதி சேர் வரி (வற்) 15 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்படவுள்ளது. இந்த வரி மக்கள் நாளாந்தம் கொள்வனவுசெய்யும் 02

## யாழ் தேவி தடம்புரள்வு

கொழும்பு, நவ. 28

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு பயணித்த யாழ். தேவி தொடருந்து தடம்புரண்டுள்ளதால் வடக்குக்கான தொடருந்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தொடருந்துக் கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கல்கமுவ 02

## வடக்கில் அதிகரிக்கும் எய்ட்ஸ் நோயாளர்கள்

யாழ்ப்பாணம்,நவ.28

வடக்கு மாகாணத்தில் யாழ்பாணத்திலேயே அதிகமான எய்ட்ஸ் நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் எய்ட்ஸ் கட்டுபாட்டு பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இத 24

# ஒட்டுசுட்டான் படுகொலையின் 29ஆவது ஆண்டு நினைவேந்தல்

முல்லைத்தீவு,நவ.28
முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 29ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டன.

1990ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 27ஆம் திகதியன்று இலங்கை இரணுவத்தின் வான் தாக்குதலில் 11 பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்டனர்.

அவர்களை நினைவேந்தும் நிகழ்வானது, ஒட்டுசுட்டான் சிவன் கோவிலுக்கு முன்பாக இடம்பெற்றது. படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்காகப் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த படுகொலைச் சம்பவத்தின் போது தந்தையையும், சகோதரரையும் இழந்த கண்ணன் என்பவர் பொதுச்சுடரை ஏற்றினார். படுகொலைச் சம்பவத்தில் உயிரிழுந்தவர்களின் உறவினர்களும், பொது மக்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

வன்னிக்குறோஸ் தாயக உறவுகள், நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், ஒட்டுசுட்டன் பகுதி வர்த்தகர்கள், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(ஐ246)

## பொது அறிவுத் தகவல்கள்

- மண்புழுவுக்கு 5 சோடி இதயங்கள் இருக்கும்.
- ஒரு தவளை சராசரியாக 40 ஆண்டுகள் உயிர் வாழும்.
- மழையில் விற்றமின் பி12 உள்ளது.
- நீர் யானை, மனிதனைவிட வேகமாக ஓடக்கூடியது.
- புதிதாகப் பிறந்த திமிங்கலம் 7 தொன் எடை கொண்டது.
- இருளிலும் ஒளிரக்கூடிய சுறா மீன்களில் சுமார் 50இற்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன.
- ரோமானியர்களுக்கும் பெர்ஷியர்களுக்கும் நடந்த போர் 721 ஆண்டுகள் வரை நீடித்தது.
- வரிக்குதிரைகளின் உடலில் உள்ள வரிகளைப் பார் கோடு போல
- ஸ்கேன் செய்து, தனித்தனியாக அடையாளம் கண்டுகொள்கிறார்கள் விஞ்ஞானி கள்.
- மொராக்கோவில் கி.பி. 859 இல் தொடங்கப்பட்ட கருயீன் (Karueein) பல்கலைக்கழகமே, இன்னமும் தொடர்ந்து இயங்கி வரும் உலகின் பழமையான உயர்கல்வி நிறுவனம்.
- பனிப்பாறைகளில் காணப்படும் கறுப்புக் கழிவுகளைக் கொண்டு, பெங்குயின் வசிப்பிடங்களை விண்வெளியி லிருந்தே அடையாளம் காண முடியும்.

### எக்னெலிகொட...

செயற்பட்ட லெப்டினன் கேணல் ஷம்மி அர்ஜுன குமாரரத்ன உள்ளிட்ட இராணுவப் புலனாய்வு உறுப்பினர்கள் 9 பேருக்கு எதிராகவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவை இரசியமாகவும் சட்டவிரோதமாகவும் தடுத்துவைக்கும் நோக்கில், கடத்தியமை மற்றும் கொலை செய்தமை உள்ளிட்ட 17 குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான, சம்பத் அபேகோன், சம்பத் விஜேரத்ன மற்றும் கிஹான் குலதுங்க ஆகியோர் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2010ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் மற்றும் 27ஆம் திகதி ஆகிய காலப்பகுதிக்குள், கிரிதலே, கொஸ்வத்த மற்றும் பத்தரமுல்ல ஆகிய பகுதிகளில், தம்முடன் தொடர்பில்லாத நபர்களுடன் இணைந்து பிரகீத் எக்னெலிகொடவை கடத்திச் சென்றமை தொடர்பில், பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கின் ஏனைய பிரதிவாதிகளாக, நாதங் என அழைக்கப்படும் ராஜபக்ஸ, சுரேஷ் என அழைக்கப்படும் வடுகெதர வினி பிரியந்த டிலன்ஜன் உபசேன, ரஞ்சி என்று அழைக்கப்படும் சமிந்த குமார அபேரத்ன, தனுஷ்க குணரத்ன, ஐயாசாமி பாலசுப்ரமணியம், தரங்க பிரசாத் கமகே மற்றும் பீரிஸ் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததையடுத்து, நீதிவான் நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டபிணை மனுவிற்கு அமைய பிரதிவாதிகளுக்கு பிணை வழங்க சிறப்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதிவாதிகள் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்துள்ள நீதிமன்றம், அவர்களின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஒ,5)


### மரண அறிவித்தல்

## இராமலிங்கம் சின்னராசா



உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சின்னராசா நேற்று (27.11.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் அருளம்மா தம்பதிகளின் அன்பு மகனும் நடராசா, மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும் லலிதா (மன்னம்பிட்டி), கவிதா (கனடா), காலஞ்சென்ற தயாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகலிங்கம், சிவராசா, சுபாசினி ஆகியோரின் மாமனாரும் சரண்யா, சந்தியா, சர்மி, கரீனா, அஸ்வின், தனுசாந், கிரிஜன், ஷகானா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2019) வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுல் கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
செல்வநாயகம் வீதி, கோண்டாவில்கிழக்கு — குடும்பத்தினர்

### மரண அறிவித்தல்

## திருமதி ஜெயராணி இலட்சுமிகாந்தன் (ராணி)



யாழ்ப்பாணம்- துறைமுகம் மாதகலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராணி இலட்சுமிகாந்தன் (ராணி) **(24.11.2019)** ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கமணியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசாகப்பெருமாள்- சிவநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகளும், இலட்சுமிகாந்தன் (காந்தம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ரஜனிகாந்த் மற்றும் ஜெயகாந்த், காந்தமலர் (தர்சினி), காலஞ்சென்ற காந்தரூபி (ரூபா) மற்றும் கிஷோக்காந்த் (கிஷோக்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சண்முகசுந்தரம் மற்றும் பரமேஸ்வரியம்மா, சிவராசா, தேவாமிர்தம், காலஞ்சென்ற ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் , காலஞ்சென்ற அருந்தவம், சிறீஸ்காந்தராஜா (சிறீ- பிரித்தானியா), கனகரட்ணம் (குட்டி), யோகராணி, ஜெகதாம்பாள் (புனிதா), காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், செல்லத்துரை, பரமேஸ்வரி, செல்வநாயகி, காலஞ்சென்ற விஜயபாலசிங்கம் மற்றும் சந்திரமலர் (தங்கன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் தீபரஞ்சன் (தீபன்), அழகநாதன் (நாதன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஷ்வந்னா, ஆதிரை ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(28.11.2019)** வியாழக்கிழமை மு.ப **10.00** மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக **11.30** மணிக்கு மாதகல் போதி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
துறைமுகம்.மாதகல். (இலட்சுமிகாந்தன் (காந்தம்) :- +9477 9040 730


### வரிச்....

பெரும்பாலான பொருள்களின் விலைகளில் சேர்க்கப்படுகின்றது. இந்த வரிக் குறைப்பால் பொருள்களின் விலைகள், தொலைபேசிக் கட்டணங்கள், போக்குவரத்துச் செலவுகள், தனியார் மருத்துவக் கட்டணங்கள், விடுதிக் கட்டணங்கள் போன்றன குறைவடையும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் வரி (என்பிரி), உழைக்கும்போதே செலுத்தும் வரி, பிடித்து வைத்த வரி ஆகியவையும் குறைக்கப்படவுள்ளன. பிடித்து வைத்தல் வரியானது வங்கியில் கிடைக்கும் வட்டியை நம்பி வாழும் பெரும்பாலான ஓய்வூதியர்களுக்கும், வங்கி வட்டியை நம்பி வாழும் மக்களுக்கும் பிரச்சினையாகக் காணப்பட்டது. இந்த வரிக் குறைப்பு அவர்களுக்கு ஏதுவானதாகக் காணப்படும்.

உழைக்கும்போதே செலுத்தும் வரி ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் ஊழியர்களிடம் இருந்து அறவிடப்பட்டது. இந்த வரி நீக்கமானது அதிகூடிய வருமானம் ஈட்டும் வர்க்கத்தினரின் வருமானத்தை அதிகரித்து, அவர்களின் கொள்வளவுச் சக்தியை அதிகரிக்கும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் வரிக் குறைப்பானது சில்லறை வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரி குறைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

### நினைவேந்திய...

வாகனங்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நினைவேந்தல் நடந்த இடத்தைச் சுற்றிலும் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் நிறுத்தப்பட்டனர் என்றும், நினைவேந்தல் சிவில் உடை தரித்தோரால் காணொலிப் பதிவு செய்யப்பட்டது என்றும் மக்கள் கூறுகின்றனர்.

அதேவேளை, பருத்தித்துறை முனையில் நடந்த நினைவேந்தலில் ஒலி பெருக்கிப் பாவனைக்குப் பொலிஸார் தடை விதித்துள்ளனர். அதையடுத்துச் சுடரேற்றும் நேரத்தில் ஒலிப்பெட்டி (பொக்ஸ்) மூலம் பாடல் ஒலிக்கவிடப்பட்டுள்ளது. அதையடுத்து பருத்தித்துறைப் பொலிஸார் ஒலிப்பெட்டி உரிமையாளரை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று ஒலிப்பெட்டிப் பாவனைக்கு அனுமதி பெறாவில்லை என்று வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒலிப்பெட்டிப் பாவனைக்கு அனுமதி பெறத் தேவையில்லை என்று கூறிய போதும், அதைப் பொலிஸார் ஏற்கவில்லை என்று நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அதைப்போன்று, முழங்காவில் துயிலும் இல்லத்துக்குப் பேருந்தில் சென்ற மக்களை ஜெயபுரம் வீதியில் வழிமறித்து இர்ாணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


சம்பவம் இடத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் இராணுவத்தினருடன் தர்க்கப்பட்டதை அடுத்து இராணுவத்தினர் பேருந்தைத் தொடர்ந்து பயணிக்க அனுமதித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-105,26)

### யாழ்தேவி...

அம்பன்பொல தொடருந்து நிலையங்களுக்கிடையிலேயே யாழ். தேவி தொடருந்து நேற்றுப் பிற்பகல் தடம் புரண்டுள்ளது. எனினும் பயணிகளுக்கு பாதிப்பு இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தடம்புரண்டுள்ள தொடருந்துப் பெட்டிகளை சீராக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் வடக்குக்கான தொடருந்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஒ,5)

## மரண அறிவித்தல்

# சின்னத்தம்பி அமிர்தராஜா



தோற்றம் 11.08.1947 — மறைவு 27.11.2019

கிராம கோட்டடி, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் இல. **97/3**, அரசடி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அமிர்தராஜா நேற்று **(27.11.2019)** புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மனைவி காலஞ்சென்ற ராணி அம்மா (கமலா), அமிர்தசேகர் - மகன் (லண்டன்), அமிர்தலோஜினி (மகள்), வசந்தமனோகரன் (மருமகன்-டென்மார்க்), அமுதவாகினி (இரண்டாவது மகள்)-பிரதாபன் (மருமகன்), அமிர்தேசன் (கடைசி மகன்) ஆகியோரின் தந்தையும், மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று **(28.11.2019)** வியாழக்கிழமை காலை **9.00** மணியளவில் இறுதிப் பிரார்த்தனை அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**97/3, அரசடி வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 820 1950**

CS20561(16/17)

## மரண அறிவித்தல்

# அப்பாத்துரை பஞ்சாட்சரம்



மறவன்புலவு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் அல்லாரை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட அப்பாத்துரை பஞ்சாட்சரம் நேற்று (27.11.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் தட்சிணாமூர்த்தி, சிவசோதி, சுந்தரமூர்த்தி, ஈஸ்வரி, மாலாதேவி, ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சுபாஜினி, சுபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார், சிவகங்கை, ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுரங்கா, மஞ்சுதா, சர்மிகா, கவின், அரவின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12.00 மணியளவில் கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**அல்லாரை வடக்கு,**
**மீசாலை.**


C11815(16/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# துரைசிங்கம் கெங்காதரன்

**(ஓய்வூதியர் - சமுநல சேவைகள் திணைக்களம்)**




வட்டுக்கோட்டை மாவடியை பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் கெங்காதரன் நேற்று (27.11.2019) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி தேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான செந்தில்நாதன் மங்கையற்கரசி, சிவநேசன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் லதன் (பொது சுகாதார பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - சங்கானை) அனிதா (ஆசிரியை, கிளி - செல்வியாதீவு அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆரனி (ஆசிரியர், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை) வாகீசன் (கொள்வனவு உத்தியோகத்தர் ப.நோ.கூ.ச-அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சஜானா, அபிநயன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(28.11.2019)** வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மூளாய் பித்தனை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராமதோட்டம்,**
**மூளாய்கிழக்கு, சுழிபுரம்.**

**தகவல்:- குடும்பத்தினர்**
**077 340 5973**




கார்த்தி, நரேன், தினா, ஜார்ஜ் மரியான், அர்ஜுன் தாஸ் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் 'கைதி'. லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் வெளியான இந்தப் படத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

'பிகில்' படத்துக்குப் போட்டியாக வெளியானதால், முதல் வாரத்தில் 250 திரையரங்குகளில்தான் வெளியானது. ஆனால், விமர்சனரீதியாக நல்ல வரவேற்பு கிடைத்ததால், தொடர்ச்சியாகத் திரையரங்குகள் அதிகரிக்கப்பட்டு வருகிறது. தற்போது 3 வாரங்களில் இந்தப் படம் 350 திரையரங்குகளில்திரையிடப்பட்டுள்ளதாக, தயாரிப்பாளர் எஸ்.ஆர்.பிரபு தனது பதிவில் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும், சென்னையில் 'பிகில்' திரையிடப்பட்டு வந்த முக்கியத் திரையரங்குகளில் 'கைதி' மாற்றப்பட்டுள்ளதால், படக்குழு பெரும் மகிழ்ச்சியில் உள்ளது. 'கைதி படத்தின் வசூல் தொடர்பாக விசாரித்த போது, 2019ம் ஆண்டில் நல்ல இலாபம் கொடுத்த படங்கள் வரிசையில் 'கைதி' இணைந்து விட்டது என்றனர்.

'கைதி' படத்துக்குப் பிறகு ஜீத்து ஜோசப் இயக்கத்தில் கார்த்தி நடித்துள்ள படம் டிசெம்பர் வெளியீடாகத் திரைக்கு வரவுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் பணிபுரியும் **சுதர்சன் (சுதன்)** அவர்களின் சகோதரன் கோண்டாவில் ஸ்ரேசன் றோட்டைச்சேர்ந்த

**நடராசா பிரசாந் (சின்னவன்)**

நேற்று (27.11.2019) புதன்கிழமை காலமான செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம்
**Hotel Star Rest**
A9 வீதி, பரந்தன்

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொலை தொடர்கல்வி நிலையம்
பட்ட, பட்ட மேற்படிப்பு கற்கைகளுக்கான
புதிய அனுமதிக்கு விண்ணப்பம் கோரல் - 2019

**பட்டக்கற்கை நெறிகள் (Top up, 03 வருடங்கள்)**

| | |
|---|---|
| B.A in English | B.Ed in Education |
| B.A in History | B.Sc in Computer Science |
| B.A in Political Science | B.Sc in ICT |
| B.B.A in Management (Online) | B.Sc in Nursing |
| B.Sc in MLT/ MLS | |

**பட்ட மேற்படிப்பு கற்கை நெறிகள்**

MA
MSc
MBA
M.Ed
BSMS (Siddha Medicine)

**UGC Approved**

**முது தத்துவமாணி கற்கை நெறிகள்**

M.Phill, Ph.D *(நிபந்தனைக்குட்பட்டது)*

**குறிப்பு:-**

1. கற்கைகள் யாவும் பல்கலை. மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமுடையது
2. க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்க்கும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க முடியும்.
3. ஆய்வுச் சுருக்கம், ஆய்வுக்கட்டுரை , ஆய்வுத்தாள்கள் கற்கைகளுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுதிகதி : 15.12.2019**

கற்கைத்துறைகளில் ஆர்வமுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவம், சுயவிபரம் என்பவற்றுடன் அடையாள அட்டைப்பிரதி, பிறப்புச் சான்றிதழ்பிரதி, புகைப்படம்**(03)**, தகைமை ஆவணங்கள் என்பவற்றினை **15.12.2019** இனுள் அலுவலகத்தில் அல்லது **degreeinfo08@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**IPS**

கலாநிதி .N.தணிகாசலம்பிள்ளை
முன்னாள் கல்விப்பணிப்பாளர்,
பட்ட, பட்ட மேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்
யாழ் பல்கலைக்கழகத்திற்கு
அண்மையில், திருநெல்வேலி.
TP:- 021 434 0229, 077 602 1794

CS10040(16/17)

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை மகிந்தன்

யாழ் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகிந்தன் நேற்று (27.11.2019) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் ஹேமாலினி (ஆசிரியர் - கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), தர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினம் சின்னம்மா தம்பதிகளின் பேரனும், குமாரசாமி, காலஞ்சென்ற நடராஜா, அருணாசலம் ஆகியோரின் மருமகனும் விஜித்தா, அனுசியா மோகன்ராஜ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**54/10, கொழும்புத்துறை வீதி,**
**பாண்டியந்தாழ்வு,**
**யாழ்ப்பாணம்.** (CS 24176)(04.17)

**தகவல் : குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
24
10
1932



இறைவனடியில்
22
11
2019

### திருமதி. சந்திரசேகரம் சிவபாக்கியம்

சாவகச்சேரி பெரியமாவடியைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி மற்றும் சுவிற்சர்லாந்து லூர்சென்னை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சந்திரசேகரம் அவர்கள் 22.11.2019 வெள்ளிக்கிழமை அன்று சுவிற்சலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி சந்திரசேகரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் இராசம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி செல்லாச்சி தம்பதிகளின் மருமகளும், காலங்சென்றவர்களான திரு முத்தையா, திரு. வியாகேஸ் (ஓய்வு பெற்ற அதிபர்-அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி) திருமதி மகேஸ்வரி, திருமதி தையல்நாயகி, திரு விஜயநாதன் (ஓய்வு பெற்ற தொலுக்கு முதலியார்), திருமதி பரமேஸ்வரி, மற்றும் திருமதி கமலாதேவி, திருமதி கமலாசனி (கனடா), திரு சுந்தரலிங்கம், திரு நடராசா, திரு ப்ஞ்சாட்சரம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான திரு இரத்தினம், திருமதி செல்லமுத்து, மற்றும் திருமதி தங்கமுத்து (சுவிஸ்), திரு லேப்பிள்ளை (கனடா), திருமதி தேவரத்தினம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பாக்கியச்சந்திரன் (சிவராசன்), மற்றும் சந்திரகுமார் (சுவிஸ்), செல்வி சந்திரவதனா(சுவிஸ்), மோகனச்சந்திரன் (பொறியியலாளர்-வவுனியா), திருமதி சந்திரமதி (சுவிஸ்), ரவிச்சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி நளினி (சுவிஸ்) திருமதி தேவசேனா (ஆசிரிய ஆலோசகர் - வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு), திரு விஜயகுமார் (சுவிஸ்), திருமதி செல்வராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவச்சந்திரன், சிவானுஜா, கிரிசாந்தி (பொறியியலாளர்), நிசாந்தி (ஆசிரியை - வ/வவுனியா மத்திய மகா வித்தியாலயம்), குர்சாந், (பல்கலைக்கழகம்-ஊவா வெல்லஸ), டினோஜன் (சுவிஸ்), அஸ்விகன் (சுவிஸ்), ஜருசாந் (சுவிஸ்), ஜவீனா (சுவிஸ்), ஜதுகுலன் (சுவிஸ்), ரமிஷா (சுவிஸ்), ரமியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆர்யனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.11.19 அன்று வியாழக்கிழமை சுவிற்சர்லாந்து லூர்செனில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:- சந்திரசேகரம் மோகனச்சந்திரன் – வவுனியா
தொலைபேசி இல:- 0773544835, 0776052189

## வேண்டுகின்றோம்



ஈழத்தின் மூத்த இடதுசாரியான
**கலாநிதி சிதம்பரம் மோகன்**
அவர்களை மக்கள் சேவைக்காக
வடமாகாண ஆளுநராக நியமிக்குமாறு
அதி உத்தம ஜனாதிபதி **கோட்டாபாய**
ராஜபக்ஷ அவர்களிடம் வேண்டுகின்றோம்.

**நலன்விரும்பிகள், யாழ் மாவட்டம்**

## துயர்பகிர்கின்றோம்

முன்னாள் மாகாணசபை உறுப்பினர்
**பா.கஜதீபன்** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி பாலச்சந்திரன் சீதாலெட்சுமி



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஏழாலை மேற்கு**
**மாதர்கிராம அபிவிருத்திச் சங்கம்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15
06
1947



மறைவு
13
12
2015

### அமரர் இந்திராணி திருநீலகண்டன்

திதி: துதியை



அன்பும் பண்பும் நிறைந்த எங்களது
அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட
இனிக்கும் நினைவுகளுடனே
நான்காண்டும் ஆயிற்றோ
நீவிர் எம்மைவிட்டுப் பிரிந்து
சொந்தபந்தங்கள் வாழ்வாதாரமாய்
மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே!
என்றும் உம்மை நினைத்தே
நாம் அஞ்சலி செய்கின்றோம்!
பெற்றிடுக சாந்தி! ஓம் சாந்தி

இல.14, விதானையார் வீதி,
2 ஆம் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (CS.1026)(13.17)

என்றும் அன்புடன் நினைவுகூருகின்ற
குடும்பத்தினர்.
021 222 1126

## மரண அறிவித்தல்

பிறப்பு
01
11
1943



இறப்பு
27
11
2019

### ஆறுமுகம் சிவபாக்கியம்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவபாக்கியம் 27.11.2019 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சின்னாச்சிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சிவசோதி அம்மா (வவுனியா), குணரஞ்சன் (வவுனியா), குணநேசன், குணநாதன் (லண்டன்) காலஞ்சென்ற குணநீதன், குணதீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் செபதாஸ் - ராகினி, ஜெயந்தி, தர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் கந்தசாமி, சின்னம்மா, சிவகுருநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வேலாயுதரின் (கோப்பாய்) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**கைதடி.** **தகவல் : குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு : 077 611 0042 - மகன்**
**077 419 8325 - சகோதரன்**
(CS 29559)(14.17)



# மனதில் உறுதி வேண்டும்

மனதில்உறுதிஇருந்தால்மலைகளைக் கூட மண்டியிட வைத்துவிடலாம். மன உறுதி இல்லாதவர் கூழாங்கற்களுக்கே கூட குனிந்து வணக்கம் சொல்ல வேண்டியிருக்கும். மனஉறுதி படைத்தவர் எதிர்ப்பு, ஏளனம், இடையூறுகளை எதிர்த்து முன்னேறிச் செல்கின்றனர்.

"கவலை நாளைய துயரங்களை அழிப்பதில்லை, இன்றையவலிமையைஅழித்துவிடும்" என்பதை மறந்து விடாதீர்கள். எவ்வளவு சிரமங்கள் வந்தாலும், எவ்வளவுதுன்பம்நேர்ந்தாலும்நாம்நினைத்து எதிர்மாறாகநடந்தாலும், எடுத்தகாரியம் நடக்கவில்லை என்றாலும் துவண்டு விடாதீர்கள். ஏன்அடுத்தவிநாடியிலேயே மாறலாம்.

மனஉறுதியைநாள்தோறும்இதயத்தில் விதைத்து வந்தவர்கள், மகத்தான சாதனைகளையே அறுவடை செய்திருக்கிறார்கள்.

"முடியும் வரை முயற்சி செய்
உன்னால் முடியும் வரை அல்ல
நீநினைத்தசெயல்
முடியும் வரை"

ஒன்றை மட்டும் புரிந்துகொள்ளுங்கள். வெப்பத்தைஏற்றுக்கொள்ளும்தன்மை இல்லாவிட்டால்மத்தாப்புக்களால்பிரகாசமாய்ஒளிர்ந்திடமுடியாது. எனவேஎந்த செயலானாலும் சரி, மன உறுதியுடனும் அதில்முனைப்புடனும்செயல்படுவோம். வெற்றிக்கனி நம் கைகளில் விழும். தோல்விகள் நம் கால்களில் விழும்.

## பொன்மொழிகள்

- உலகவரலாற்றைப்படிப்பது சிறப்பு.
- அதனினும் சிறப்பு உலகில் வரலாற்றைப்படைப்பது!.
- நற்பண்பு இல்லாத அறிவு ஆபத்தானது! அறிவில்லாத நற்பண்போ பயனற்றது.
- வாய்மையின் மிக நெருங்கிய நண்பன் அச்சமின்மையே.
- திட்டமிடப்படாதசெயல்துடுப்பில்லாத படகுக்கு ஒப்பானது.
- நல்லகருத்துக்களைப்பேசுபவன்விதைக்கிறான்!கேட்பவன் அதை அறுவடை செய்கிறான்.
- கோபத்தை அன்பாலும், தீமையை நன்மையாலும் தான்போக்க முடியும்!
- அறிவுள்ள அதிகாரம் சிறப்புறும்.
- மனித சமுதாயத்தின் முன்னேற்றம் அதன் பண்பால் வரையறுக்கப்படுகிறது.

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வயதான அம்மாவை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
**077 651 0696, 071 902 5745**

## மரண அறிவித்தல்



## விநாயகமூர்த்தி யோகானந்தவேல்

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டை வதிவிடமாக கொண்ட வல்வெட்டித்துறை சாயி நிலையத் தலைவரான விநாயகமூர்த்தி யோகானந்தவேல் (MA) கடந்த (26.11.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடனசிகாமணி - மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் ரஞ்சனி (ராணி)யின் அன்புக்கணவரும் சிவகுமார் (ரமேஸ்), பிரபாகரன் (பிரகாஸ்), பாமினி ஆகியோரின் தந்தையும் சுபாஜினி, மைதிலி, சிவகுமார் (சிவா) ஆகியோரின் மாமனாரும் கார்த்திகாயினி, கிருட்டிகா, உமேஷ், தானியா, சிவலிங்கேசர், சிவசொரூபினி ஆகியோரின் பேரனும் வைரமுத்து, சக்தி வேலாயுதம், ஞானவேலாயுதம், குமரகுரு, சிவானந்தவேல், வள்ளியம்மைப் பிள்ளை, சீதாலட்சுமி அம்மாள், கமலாம்பிகை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஊரிக்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (29.11.2019) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலியதனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 556 9908, 077 810 6857** தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
10 - 05 - 1932



மறைவு
27 - 11 - 2019

## இராமையா செல்வநாயகம்

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமையா செல்வநாயகம் நேற்று (27.11.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமையா தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாம்பாளின் அன்புக்கணவரும் செல்லத்துரை, காலஞ்சென்ற தவமலர் மற்றும் மகேஸ்வரி, மகாலிங்கம், செல்வரட்ணம் , அருளம்மா, சிவஞானம், யோகநாதன் ஆகியோரின் அன்பு அண்ணனும் வசந்தி, மாலினி, கௌரி, ரஜனி, சுஜாதா ஆகியோரின் அன்புத்தந்தையும் இரங்கநாதன், சதானந்தசிவம், முகுந்தன், பத்மஜெயம், குகதாஸ், ஆகியோரின் அன்பு மாமனாரும் கோகுல்நாத், பவித்திரா, கீர்த்திகா, ஜெசித், சபீனா, கேதாரன், கிருஸ்ணி, ஹரனி, கௌசிகன், கிருஷா, துபீசன், சதுஷன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், பாலகிருஷ்ணன் மற்றும் பாலச்சந்திரன் (பேபி), லோகசரோஜா, பாக்கியலட்சுமி, பத்மராணி, கௌரி, ருக்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2019) வியாழக்கிழமை பி.ப 1.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்திரானை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# ஈராண்டு நினைவில் ஈரவிழிகளுடன்



## அமரர் பொன் சின்னையா (கொண்டா இராசு)

(பிரபல புகையிலை வர்த்தகர், அன்னதான புருஷர், பழவத்தை காளியம்பாள் தேவஸ்தான அறங்காவலர், யோகாஸ் கிறீம் ஹவுஸ், மந்திகை, எரிபொருள் நிரப்பு நிலையம், மந்திகை, PS ஸ்தாபனம், மந்திகை ஆகியவற்றின் ஸ்தாபகர்)

இராச தீபச்சுடர் அணைந்து
ஈராண்டு ஓடியதென்ன!
ஈரவிழி காயாமல்
இதயமெல்லாம் தேடியதென்ன!

மண்ணைவிட்டு போன பின்னும்
கண்ணுக்குள்ளே வாழ்வதென்ன!
பொத்தி வைச்ச நேசமெல்லாம்
எம்மைச் சுத்திச்சுத்தி வருவதென்ன!

கொண்டா இராசு என்னும் பேர்
இன்னும் ஊருக்குள்ளே வாழுதய்யா
நீ தொண்டு செய்த சபைகளெல்லாம்
உந்தன் புகழ் பாடுதையா

சின்னையா பெயரைச் சொல்லி
பசியாறும் ஜீவனெல்லாம்
எங்கையா போனீர்! என்று
கண்கலங்கி வாடுதையா

பழவத்தை ஊரையெல்லாம்
அழவைத்த தந்தையே ! உம்மை
இழந்த பின்னும் நாம்
வாழ்வதென்பது விந்தையே!



திதி:வளர்பிறை துதிகை (28.11.2019)

பிறப்பு
15.12.1944

இறப்பு
19.11.2017

உமது நினைவை சுமந்து நிற்கும்
P.S.Y. கஜீவன் (பேரன்-சுவிஸ்)
யோகாஸ் ஐஸ்கிறீம் (சுவிஸ்)

# மரண அறிவித்தல்

## திருமதி பூரணம் தம்பிராசா



கருவியாத்தனை பாலாவோடை களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் தம்பிராசா 26.11.2019 செவ்வாய்க் கிழமை அதிகாலை 3.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர் களான வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதி களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பிராசாவின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் நவஜீதராஜா,கேதீஸ்வரராசா, கேதீஸ்வரி (சுவிற்சர்லாந்து), பிரதீபராஜா, தேன்மொழி ஆகியோரின் அன்புத்தாயாரும் மஞ்சுளாதேவி, நவரட்ணராஜா, (சுவிற்சர்லாந்து), ஜெயந்தராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தவமணிதேவி காலஞ்சென்ற கனகரட்ணம், மகேஸ்வரி காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சுந்தரலிங்கம், காலஞ் சென்ற கணேசலிங்கம் ஆகியோரின் அன்புமைத்துனியும் கவின், அபிஷன், மகி, பிரணவன், கதிரவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று **(28.11.2019)** வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெற்று காலை 9.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தில்லை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கருவியாத்தனை,**
**பாலாவோடை, காரைநகர்.**

**தகவல்:- குடும்பத்தினர்**
**மகன் (பிரபா) 077 4671562**

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## பெறுகை அறிவித்தல்

**2020ம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு, பாதுகாப்பு, சாரதி சேவைகளுக்கான விலைமனுக் கோரல்**

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2020ம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு (Cleaning Service), காவற்கடமை, சாரதி போன்ற சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை | 03 |
| | சாரதி உதவியாளர் | 03 |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு சேவை | 09 |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை | 03 |

01. சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
02. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
03. சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 28.11.2019 தொடக்கம் 12.12.2019 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப் படாத வைப்புப் பணமாக ரூ2500.00ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
04. பெறுகை ஆவணங்கள் 13.12.2019 ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்". என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
05. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

க.தர்ஷன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

# மீள்கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2020

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றிற்கு 2020:01.01 ஆம் திகதி தொடக்கம் 2020.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2019.11.28 - 2019.12.04 மு.ப 11.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2019.12.04 ந..ப 12.00 மணி வரை
கேள்விதிறக்கும் திகதி :- 2019.12.04 பி.ப 12.30 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும், அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

01. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும். வதிவிடச்சான்றிழுக்குப் பதிலாக கேள்விதாரரின் பெயரிலுள்ள மின்சாரக் கட்டணப் பட்டியல் அல்லது நிலையான தொலைபேசிக் கட்டணப் பட்டியலையும் சமர்ப்பிக்கலாம்.
02. சங்கானை மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் (கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள்) ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் 2019 நவம்பர் 14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பிருந்து கேள்விப்பத்திரம் பெறும் போது ரூபா 200.000.00 க்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரமாக வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி / வைப்புச் சான்றிதழ், தானியங்கி இயந்திரம் மூலம் பணம் பெறும் அட்டை இருந்தால் அதனையும் சமர்ப்பித்தல் வேண்டும். தானியங்கி இயந்திரம் மூலம் பணம் பெறும் அட்டை இல்லையாயின் வங்கி முகாமையாளரால் உறுதிப்படுத்த வேண்டும். சித்தியடையாத கேள்விதாரரது வைப்புச் சான்றிதழ் கேள்விதிறந்த மறுநாள் மீளளிக்கப்படும். சித்தியடைந்த கேள்விதாரரது வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி/ வைப்புச் சான்றிதழ், தானியங்கி இயந்திரம் மூலம் பணம் பெறும் அட்டை என்பன கேள்வித் தொகையின் 1/3 பகுதியை அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளளிக்கப்படும்.
03. சங்கானை மரக்கறி, சந்தைக்கான மின்சாரக் கட்டணம் 01.01.2020 - 31.12.2020 வரையான பன்னிரண்டு மாதங்களுக்கும் குத்தகையாளரால் செலுத்தப்படல் வேண்டும்.
04. சங்கானை மரக்கறிச் சந்தை வளாகத்திலுள்ள மலசலகூடத்தின் சுத்திகரிப்பு, மற்றும் பராமரிப்பு பொறுப்புகள் அனைத்தும் குத்தகையாளரையே சாரும். அதற்காக ஒரு தனியான ஊழியர் ஒருவரை நியமித்து பாவனையாளர்களிடமிருந்து ரூபா 10.00 இற்கு அதிகரிக்கப்படாத கட்டணம் அறவிடலாம். அத்துடன் மலசலகூடத்தின் சுத்தம், பராமரிப்பு தொடர்பாக சபை அலுவலர் / அலுவலர்களால் அடிக்கடி மேற்பார்வை செய்யப்படும்.
05. சங்கானை மரக்கறிச்சந்தை தவிர்ந்த ஏனைய சந்தைகள் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் குத்தகைக்கு வழங்கப்படும்
06. சங்கானை நவீன மீன் சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இச்சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
07. மீன் வெட்டும் இடத்தின் தூய்மையை குத்தகைக்காரர் பொதுசுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
08. பல்லசுட்டி சந்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் அதனை நடாத்துவதற்குரிய இடத்தினை தற்போது சந்தை இயங்கும் இடத்திலிருந்து 500m சுற்றுவட்டத்தினுள் தாமே தெரிவுசெய்தல் வேண்டும். மேலும் தெரிவு செய்த இடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு பொதுச் சுகாதார பரிசோதகரின் சிபாரிசுக்கமைவாகவே செயற்பட வேண்டும். அத்துடன் தெரிவு செய்யும் இடத்திற்கான குத்தகையோ அல்லது வாடகையோ குத்தகையாளராலேயே கொடுக்கப்பட வேண்டும்.
09. சத்தியக்காடு சந்தையை குத்தகைக்குப் பெற்றுக்கொள்வோர் மீன்சந்தையில் மீன் வெட்டுமிடத்தின் தூய்மைக்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
11. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
12. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை ( VAT, NBT உட்பட) 10.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
14. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.
15. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.
16. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்.
17. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன் கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் (மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, மீன் வெட்டும் இடம்) ஊடு ஒன்றிற்கு(5'X 3') ரூபா 50.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 5.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
18. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் " என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிடமுடியாது.
19. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
20. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் ( VAT , NBT, ஏனையவை ) வாடகைத்தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.
21. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
22. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப் பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | சங்கானை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை (வாகனப் பாதுகாப்பு நிலையம் தவிர்த்து) | ___ | 6,985,650.00 | 15,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை நவீன மீன் சந்தை | ___ | 1,521,900.00 | 5,000.00 | 1,000.00 |
| 03 | சங்கானை கருவாட்டுக்கடை | 1,500.00 | 19,950.00 | 1,000.00 | 250.00 |
| 04 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 02 | 1,500.00 | 220,000.00 | 3,000.00 | 500.00 |
| | சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 01 | சத்தியகாடு சந்தை | ___ | 1,140,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | பல்லசுட்டி சந்தை | ___ | 30,660.00 | 1,000.00 | 250.00 |
| 03 | தொல்புரம் மத்திய சந்தை | ___ | 27,930.00 | 500.00 | 250.00 |
| 04 | பொன்னாலை வாராந்தச் சந்தை | ___ | 43,365.00 | 500.00 | 250.00 |
| | வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | ___ | 140,310.00 | 3,000.00 | 750.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | ___ | 20,610.00 | 1,000.00 | 500.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 02 | 1,750.00 | 140,000.00 | 1,000.00 | 500.00 |
| | அராலி உப அலுவலகம் | | | | |
| 01 | அராலி, செட்டியார்மடம் சந்தை | ___ | 22,680.00 | 500.00 | 250.00 |

**தலைமை அலுவலகம்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**
**2019.11.28**

(C 11807)(14.17)

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

## மீள்கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேசசபை , சுழிபுரம்.
## கடைகளை வாடகைக்கு வழங்குதல் - 2019

சத்தியக்காடு சந்தைத்தொகுதி மற்றும் சங்கரத்தை சந்தைதொகுதிகளில் சபையினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடைகளை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான மீள்கேள்விகள் கீழ்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) | கேள்வி வைப்புப் பணம்(மீளளிக்கக் கூடியது) | மீளளிக்கமுடியாத கேள்விப்படிவக்கட்டணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| சத்தியக்காட்டு சந்தை கடைத்தொகுதி | | | | |
| 01 | 01 | 288000.00 | 5760.00 | 1000.00 |
| 02 | 02 | 288000.00 | 5760.00 | 1000.00 |
| 03 | 03 | 288000.00 | 5760.00 | 1000.00 |
| | | | | |
| சங்கரத்தை சந்தை கடைத்தொகுதி | | | | |
| 01 | 02 | 468000.00 | 9360.00 | 1000.00 |
| 02 | 04 | 468000.00 | 9360.00 | 1000.00 |
| வட்டுக்கோட்டை நவீனசந்தை கடைத்தொகுதி | | | | |
| 01 | 01 | 76000.00 | 1520.00 | 500.00 |

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி :- 2019.11.28ம் திகதி 04.12.2019மு..ப 11.00மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2019.12.04ம் திகதி நண்பகல்12.00மணி வரை
கேள்விப்படிவம் திறக்கப்படும் திகதி :- 2019.12.04. பி.ப 12.30மணிக்கு

**நிபந்தனைகள்**

01. அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம், மீளளிக்கப்படாத கட்டணங்கள், பெறுமதி சேர்வரி ஆகியவற்றைப் பணமாகச் செலுத்தி ஆளடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2019.11.28. ஆம் திகதியில் இருந்து ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விப்படிவம் இணைப்பிரதிகளில் பெற்று 2019.12.04 ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமாகக்கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
02. அலுவலகத்தினால் வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பதாரர் எவ்விதமான மாற்றங்களும் செய்தல் ஆகாது.
03. படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்களில் விண்ணப்பதாரரால் சிற்றொப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
04. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியை "தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்" என முகவரியிட்டு கேள்வியடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் கடை இலக்கம் என்பன தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அலுவலகம் யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
05. 2019.12.04. ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப 12.30 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவரின் எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.
06. 2019.12.04. ஆம் திகதி ந.ப.12.00 மணிக்கு பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
07. ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் உரிய முறையில் சபையில் பெற்று விண்ணப்பிக்கலாம்.
08. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்.
09. எக்கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. கேள்விதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் தான் வதியும் இடத்தின் கிராம அலுவலரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடச்சான்றிதழ், மற்றும் தேசிய அடையாள அட்டைப்பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் (Defaulters list) அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தையாக, வாடகையாக, வரியாக நிலுவையில் உள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது கண்டு பிடிக்கப்படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் அரச உடைமையாக்கப்படும். பிரதேச சபையுடனான சகல எழுத்து மூல, வாய் மூல தொடர் பாடல்கள் யாவும் குத்தகைக்காரராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்.
12. கேள்விக்காரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக்காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக் கூடிய கேள்வித் தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.
13. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திகாரக் கேள்விக்காரர் தமது கேள்வித்தொகையின் 15% பெறுமதிசேர் வரியாகவும் (VAT) 2% தேசத்தை கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வலிகாமம் மேற்கு பிரதேசசபை மூலம் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு செலுத்துதல் வேண்டும்.
14. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலைமதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்ட கடைக்கான மாதாந்த வாடகையும் மற்றும் 15 % பெறுமதிசேர் வரி (VAT), 2 % தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (NBT) ஆகியவற்றைப் பணமாக மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.
15. மாதாந்த வாடகைப் பணத்தை அந்த மாதம் 30ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப் பணமாக மேலதிகமாக செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகைப் பணத்தினை செலுத்தத்தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்தச்செய்யப்படும்.
16. முற்குறிப்பட்பட்ட 14ஆவது 15ஆவது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத்தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
17. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
18. குத்தகையாளர் தான் நடாத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்த உத்தரவுக் கட்டணத்தை வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் தொகை குறித்து அறிவிக்கப்பட்டதும் குறித்த காலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
19. வாடகைக்கு கொடுப்பவர் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒருமுறையும் அல்லது தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கும் அத்தொகையை அறவீடு செய்வதற்கும் பூரண அதிகாரமுள்ளவராயிருக்கின்றார். அதற்கு வாடகைக்காரர் மறுப்பு தெரிவிக்க முடியாது.
20. குத்தகைக்குப்பெற்ற கடையினர் மின்சார இணைப்புக்கட்டணங்கள் மற்றும் மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.
21. கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அல்லது உப வாடகைக்கு வழங்கவோ இயலாது. அவ்வாறு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருத்தல் தொடர்பாக சபையினால் கண்டுபிடிக் கப்படின் எந்த ஒரு அறிவித்தலும் இன்றி கடை மீளப் பெறப்படும்.
22. கேள்வித் திகதிக்கு முந்திய ஐந்து வருட காலத்தற்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயல்களுக் காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.
    - மிகை இலாபம் ஈட்டிய குற்றம்.
    - நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைச் சட்டத்தை மீறிய குற்றம்.
    - சந்தை உபவிதிகளை மீறிய குற்றம்.

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**த.நடனேந்திரன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.**
(C 11806)(14.17)

---

# சேவை நலன் பாராட்டு



யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க
வித்தியாலயத்தில் ஆசிரியராகக்
கடமையாற்றி ஓய்வு பெற்ற
**திருமதி.சியாமளா இராமச்சந்திரன்**
(SLTS - I, Spe.Trd Music)

சேவைக்கால விபரம்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
1990. 03. 27 - 2014.01.19
யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க வித்தியாலயம்
2014.01.20 - 2019.04.01

அவர்களது சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுக் காலம் சீரும் சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க வித்தியாலயம்
(CS>29554)

---

# சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்

**01.01.2020 முதல் 31.12.2020 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், களஞ்சிய அறைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2020**

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 27.11.2019 – 10.12.2019 வரை**
**கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 12.12.2019 மு.ப 10.00 மணி வரை**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 12.12.2019 மு.ப 10.30 மணி**

**மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | கச்சாய் உப அலுவலகம் | | | |
| 01 | கொடிகாமம் மத்திய மரக்கறிச் சந்தை, வண்டி வாகன தரிப்பு நிலையம் | 9,947,800.00 | 99,500.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் மீன் சந்தை | 1,408,600.00 | 14,100.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 824,200.00 | 8,200.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக் கடை | 1,189,100.00 | 11,900.00 | 750.00 |
| 05 | களஞ்சிய அறை இல - 01 | 24,800.00 | 500.00 | 750.00 |
| 06 | களஞ்சிய அறை இல - 02 | 23,600.00 | 500.00 | 750.00 |
| 07 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 01 | 17,800.00 | 500.00 | 750.00 |
| 08 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 02 | 15,800.00 | 500.00 | 750.00 |
| 09 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 03 | 14,900.00 | 500.00 | 750.00 |
| | வரணி உப அலுவலகம் | | | |
| 10 | வரணி பொதுச்சந்தை | 95,900.00 | 1000.00 | 750.00 |
| 11 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 6,600.00 | 500.00 | 750.00 |
| | கைதடி உப அலுவலகம் | | | |
| 12 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 168,100.00 | 1,700.00 | 750.00 |
| 13 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 248,800.00 | 2,500.00 | 750.00 |
| 14 | கைதடிப் பொதுச்சந்தை | 19,900.00 | 500.00 | 750.00 |
| | மிருசுவில் உப அலுவலகம் | | | |
| 15 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 287,800.00 | 2,900.00 | 750.00 |
| 16 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக் கடை | 37,300.00 | 500.00 | 750.00 |
| 17 | மிருசுவில் பொதுச்சந்தை | 4,500.00 | 500.00 | 750.00 |
| 18 | மிருசுவில் வடக்குப் பொதுச்சந்தை | 29,700.00 | 500.00 | 750.00 |
| | நாவற்குழி உப அலுவலகம் | | | |
| 19 | நாவற்குழி பொதுச்சந்தை | 5,000.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள் :**

01. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 27.11.2019 தொடக்கம் 10.12.2019 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
03. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், என்பவற்றுடன் Vat 15%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
04. 12.12.2019 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.
05. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
06. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.
07. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
08. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
09. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை "தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக் கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை,**
**கொடிகாமம்.**
**27.11.2019**
(C 11808)(14.17)

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-11 ஆசீர்வாதப்பர் வீதியில் ஆதன இலக்கம் 211 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் அரசடி பிள்ளையார் கோவில் என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

நல்லூர் ஆறுமுகம் செல்லப்பா என்பவர் இதன்பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு கி.துரைசிங்கம் அவர்களின் முகதாவில் 2433ம் இலக்க ரிறஸ்ரி நியமனம் என்னும் வெளிப்படுத்தல் உறுதி 1950 மார்கழி 17ம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன்பின்னர் 23.10.1963ம் திகதியிடப்பட்ட 13422ல் இலக்க அறுதி உறுதி பிரசித்த நொத்தாரிசு கிருஸ்ணபிள்ளை துரைசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்டு சதாசிவத்தினால் தம்பையா மனைவி செல்வநாயகம் என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை ஆசீர்வாதப்பர் ஒழுங்கையை சேர்ந்த தம்பையா கைம்பெண் செல்வநாயகம் 06.09.1982ம் திகதி 6719ம் இலக்கத்தில் சீதன உறுதியினை பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராஜா மகாதேவா முகதாவில் நிறைவேற்றி தனது புத்திரி துரைராசசிங்கம் பெண் விமலாதேவிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

பின்னர். 07.02.2019ம் திகதியிடப்பட்ட 2303ம் இலக்க சீதன உறுதி பிரசித்த நொத்தாரிசு ரிஷிபா இராசா மூலம் நிறைவேற்றப்பட்டு துரைராஜசிங்கம் பெண் விமலாதேவி தனது மகளான சுரேஸ்குமார் பெண் விஜிதாவுக்கு இதன் பின்னகத்தான ஆதனத்தினை சீதனமாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்** :- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை தற்போது அரியாலை இறை யாழ்ப்பாணம் மாநகரசபை நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு J/91 அரியாலை வடமேற்கு கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட "வெட்டுக்குளம் வயல்"" நில.பர இரண்டு குளி ஒன்றும் நி.ப.2 குளி 01.00 வீடும்.நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் 2016.05.09ந் திகதி 2479 இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டி அளந்ததன்படி நிலபரப்பு 1 குளி 16.90

கிழக்கு :- தேவகுணராசா பெண் சறோஜினிதேவிக்குரிய ஆதனம்.
வடக்கு :- வெட்டுக்குள நாச்சி அம்மாள் கோவிலுக்குரிய ஆதனம்.
மேற்கு :- இராசையா தாமோதரம்பிள்ளையின் ஆதனம்.
தெற்கு :- வீதி இதடங்கல் அனைத்தும் இன்னும் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றின் பங்கும்.

தற்போது சுரேஸ்குமார் பெண் விஜிதா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சுரேஸ்குமார் பெண் விஜிதா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்**
**மாநகரசபை** (C 11810)(14.17)

---

**பச்சிலைப்பள்ளி இத்தாவில், வேம்போடு கேணி**
**அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி தேவஸ்தான**
**பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் - 2019**

**இடம்:- ஆலய மண்டபம்**

**காலம்:- 01.12.2019 ஞாயிற்றுக்கிழமை பி.பகல் 3.00 மணி**

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தலைவர்** **செயலாளர்**

---

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

**ஞானபாஸ்கரோதய சங்கத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு அமரர் G.T.ஞானசேகரவேல் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி**

- அணிக்கு 7 பேர் 6ஓவர்கள் கொண்ட விலகல் முறையிலான பகல் போட்டிகள்
- 4 பேர் பந்து வீச வேண்டும்
- போட்டிகள் யாவும் சனி. ஞாயிறு. விடுமுறை நாள்களில் நடத்தப்படும்

அனுமதிக் கட்டணம் - ரூ.1500/=

1 ஆம் பரிசு - 25000.00
2 ஆம் பரிசு - 10000.00

**இடம்: G.P.S விளையாட்டு மைதானம், கல்வியங்காடு**
தொடர்பு: **077 844 8009, 077 624 7358, 077 684 5389**

---

## சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுசங்கம் (வ - து)
## விசேட பொதுச்சபைக் கூட்டம் - 30.11.2019
## அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் 30.11.2019 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலய மண்டபத்தில் சங்கத்தலைவர் செல்வரட்ணம் செந்தூரன் தலைமையில் நடைபெற உள்ளது. இவ்விஷேட பொதுச் சபைக் கூட்டத்திற்கான அழைப்பிதழ் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் தனித்தனியே தபால் மூலம் அனுப்பட்டுள்ளது. கூட்ட அழைப்பிதழ் கிடைக்கப்பெறாத அங்கத்தவர்கள் இவ்வறித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி விசேட பொதுச்சபை கூட்டத்திற்கு குறித்த நேரத்துக்கு வருகைதந்து **நிர்வாகசபை தெரிவை** மேற்கொள்ள ஒத்துழைப்பு வழுங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**உ. பரமநாதன்**
**செயலாளர்,**
**சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்** (CS.1026 (13.17)

---

**விற்பனையாளர் தேவை**

யாழ்ப்பாணம் ரவுனில் உள்ள புத்தக சாலைக்கு விற்பனை உதவியாளர் ஆண்,பெண் தேவை -
தொடர்பு : **011 5765331, 072 287 5625**

---

**தேவை** யாழ் நகரில் இயங்கும் குளிர்பான நிலையத்திற்கு **Bill Clerk** தேவை.
**078 495 7847**

---

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ 40 வயது சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
**077 905 8615 (வைபர்)**

---

**தவறவிடப்பட்டுள்ளது**

இலக்கம் 49 - 6049 உடைய உழவு இயந்திர வாகனபுத்தகம் கோண்டாவில் வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
**077 724 2381**


---

உதயன்
விளம்பர தொடர்புக்கு
advt@uthayan.com, 021 493 1111



# நல்லாதனார் தந்த திரிகடுகம் பொல்லாதவற்றை போக்கிடுமே

கே.எஸ்.சிவஞானராஜா



பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் பதினெட்டினுள் "திரிகடுகம்" என்ற நூலும் ஒன்றாகும். இந்த நூலில் நூறு வெண்பாக்கள் உள்ளன. ஒவ்வொரு பாடலிலும் மூன்று பொருள் வரமாகிறது. திரிகடுகம் என்பது சுக்கு மிளகு திப்பிலி என்று பிங்கல நிகண்டு கூறும். இந்த மூன்றும் உடல் நோயைத் தீர்ப்பது போல திரிகடுகத்தில் வருகின்ற ஒவ்வொரு பாடல்களிலும் கூறப்பட்டுள்ள மும்மூன்று பொருளும் உளநோயைப் போக்கி உண்மையான பேருவகையைத் தருவதனால் இந்த நூலுக்குத் திரிகடுகம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த நூலைப் படிக்கும்போது உடல் நலமும் உளநலமும் மேலோங்கி ஒழுக்கத்துடன் கூடிய நல்ல பண்பாளராக விளங்குவர் என்பது அனுபவசாலிகளின் அனுபவமாகும். இந்தத் திரிகடுகத்தை பாடி மகிழ்ந்தவர் நல்லாதனார் என்னும் புலவராவார். இவர் மனித மான்மியத்தை எதுகை மோனை வாழ்வியல்.ருசியோடு பசி தீர்க்குமாறு படைத்திருக்கின்றார்.

### நற்குடிமகனுக்கு தேவைப்படுபவை

அருந்ததிபோலும் கற்பையுடைய மகளிரின் தோள்களும் குற்றமற்ற பழைமையான மாண்பினையடைந்தவரோடு கொள்ளும் நட்பும், குற்றங்களை நீக்கவல்ல கேள்வியறிவினையுடைய பெரியோர்களோடு செய்யப்படும் நட்பும் ஒரு நற்குடிமகனுக்கு திரிகடுகம் போன்றவையாகும் என்கின்றது முதலாவது பாடல்.

பாடல் இதுதான்

"அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும் சொல்லின்
அரில் அகற்றுங் கேள்வியார் நட்பும் இம்மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து"

நற்குண நற்செய்கையுள்ள பெண்ணைத் திருமணம் செய்திருந்தாலே வாழ்க்கை தெய்வீகமாக மலரும். அங்கு துன்பம் ஒருபோதும் நெருங்கவே நெருங்காது. ஆகவே கற்புடைய பெண்ணானவள் இல்லத்திலும் உள்ளத்திலும் இருப்பாளாயின் அவள் வீட்டுக்கு முதற்பொருளாகி மருந்தாக இருப்பாள்.

மேலும் மூடரோடு சேர்ந்திருப்பதும் கற்புடைய மனைவியை அடித்தலும், புல்லிய அறிவீனரை வீட்டுக்குள் அழைத்துச் செல்லுதலும் கேடு பயக்கும் என்பதை இரண்டாவது பாடலில் திரிகடுகம் எடுத்தியம்புகிறது.

பகைவர் முன்னே செல்வத்துடன் வாழ்தலும் மந்தைக் கூட்டத்தின்பால் கோல் இல்லாமல் செல்லுதலும் பகைவரோடு நட்புப் பாராட்டுதலும் கெடுதியே ஆகும்.

பிறர் ஒருவர் தன்னை உயர்த்திப் பேசும்பொழுது தனக்கு இது தகாது என்று நாணுதலும் தன்னை விரும்பாதவர் தன்னை இகழுமிடத்து வெகுண்டு எழாமல் பொறுத்தலும், மேகத்தைப் போலக் கைமாறு கருதாமல் உதவி செய்தலும் சிறந்த செல்வங்களாகும்.

> “ பிறர் ஒருவர் தன்னை உயர்த்திப் பேசும்பொழுது தனக்கு இது தகாது என்று நாணுதலும் தன்னை விரும்பாதவர் தன்னை இகழுமிடத்து வெகுண்டு எழாமல் பொறுத்தலும், மேகத்தைப் போலக் கைமாறு கருதாமல் உதவி செய்தலும் சிறந்த செல்வங்களாகும்.

பெரிய சபை தன்னில் தனது படிப்புப் பற்றியும், தனது குடிப்பிறப்புப் பற்றியும், போர் வெற்றி பற்றிய பிரமாதங்களையும் எடுத்துரைத்தல் பேதைமையாதலால் எடுத்துரைத்தலாகாது. எமது நாட்டில் இதுவே கருப்பொருளாகவும் பேசுபொருளாகவும் போற்றப்படுகிறது.

### பயனற்றவை

"கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும் மூத்தோரை இல்லா அவைக்களனும் பாத்துண்ணும் தன்மையிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும் நன்மை பயத்த லில" நெடுங்கணக்கு முதலியன கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத ஊரில் இருத்தலும் கல்வி கேள்விகளில் முதிர்ந்தவர்கள் இல்லாத சபையில் இருத்தலும், பகுத்துச் சாப்பிடும் குணம் இல்லதவர் பக்கத்திலிருத்தலும் தீமையேயாகும்.

பெரும்பாலான இடங்களில் பட்டமிருந்தும் கல்வி கற்பிக்கத் தக்கவர் இல்லையே என ஏங்குகின்றனர். பலன் கருதாத புகழ் விரும்பாத பாலியல் சாராத ஒரு ஆசான் வேண்டுமென பெற்றோர் இறைவனிடம் மன்றாடுகின்றனர். வழக்கைத் தீர்க்கும் திறமையில்லாதவர் சபையில் இருக்கிறார்கள். பகுத்துப் பல்லுயிர் ஓம்பிச் சாப்பிடுகின்ற குணம் இல்லாதவர் பக்கத்தில் இருக்கிறார்கள். இத்தகையனவும் நன்மையைத் தரவே மாட்டாது. தீமையையேதரவல்லதாகும். இலங்கையில் திரிகடுகமும் பாடத்திட்டத்தில் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும்.

### உய்விலர்

'மூப்பின் கண் நன்மைக்கு அகன்றானும் கற்புடையாள் பூப்பின் கண் சாராத் தலைமகனும் வாய்ப்பகையுள் சொல்வென்றி வேண்டும் இலிங்கியும் இம்மூவர்கல்விப் புணை கைவிட்டார்"

அதாவது மூப்புவந்த இடத்தும் துறவறத்துக்கு அஞ்சி நீங்கினவனும் கற்புடைய மனைவியை குறித்த காலத்தில் சேராத கணவனும் வீண்மொழி பாடும் துறவியும் கல்வியறிவைக் கைவிட்ட உள்விலர் ஆவர்.

போர் யானைக்கு அஞ்சிப் பின் வாங்குபவனும் அயலான் மனைவியை விரும்பித் தீமையாய் ஒழுகுபவனும் நச்சுப் பாம்பைஆட்டுகின்றவனும்விரைவில் உய்யாது கெடுபவராவர்.

பல பெண்களோடு தொடர்பு கொள்வதாகிய நீசத்தன்மையும் கள்ளுண்ட பிறர் எச்சிலை உண்பதும் பொய்யை உற்பத்தி செய்யும் சூதாடுமிடத்தில் சேர்வுதும் அறவழியில்லாதார் தொழில்களாகும்.

### நோய்

விருந்தில்லாப் பகலும் மனைவியில்லாத இரவும் வறியவர்க்கு ஒன்றையுமே கொடாமையினால் கழிந்த நாளும் அறிவுடையோருக்கு நினைக்குந்தோறும் நோய்களாகும். பெண்டிரும் பொருளும், உண்டியும் காப்பாற்றப்படாமல் போனால் கெட்டுப்போகும் அதனால் வாழ்வானது துன்பத்துக்குள்ளாகி நோய் வயப்படும்.

பொதுவாகவே உலகத்தவர்களது நோய் எப்படி வருகிறதென்றால் காப்பாற்ற வேண்டியவற்றை உதாசீனம் செய்வதாலேயே ஏற்படுகிறது. பெண்ணானவள் அடுக்களைக்குள்ளேயே வெந்து நொந்து போகிறாள். அவளது நலம் ஆரோக்கியம் அபிலாஷை, விருப்பு வெறுப்புப் பற்றி எவருமே பெரிதாகக் கவனத்தில் எடுப்பதில்லை. அவளுக்கு உண்டாகும் சாவுவரை நோய்களை தனக்குள்ளேயே சமாதிகட்டி விடுகிறாள். அடுக்களை நோயில் படுக்கும்போதுதான் அதனை ஆண்டவனால் கூடத் தடுக்க முடியாமல் போகிறது. சாவு சம்பவிக்கிறது. வீடே நோயாகி விடுகிறது. எனவே ஒவ்வொரு பெண்டிரையும் இனிமேலாவது கண்ணுக்குள் வைத்து காப்பாற்றுங்கள்.

அடுத்த முக்கியமான விடயம் ஆன்மிகமும் அரசியலும் தற்பொழுது முதலாளிகளையே உருவாக்கி வருகிறது. சொத்துக்களையும் வாகனங்களையும் சௌபாக்கியங்களையும் சேகரிப்பதிலேயே கண்ணாயிருக்கிறார்கள். சிக்கனம் அறவே இல்லை. சாப்பாடும் அப்படியே! வயிறு குப்பையாகி மோசமாகி விட்டது. சாப்பாடு நஞ்சாகி விட்டது. உலகமே மாசாகி நோயாகிவிட்டது. திரிகடுகம் பேறாகட்டும்.

**டெங்கு நோய் பற்றி உங்களுக்குத் தெரியுமா?**



**காலைநேர, மாலைநேர வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களே நுளம்புக்கடியிலிருந்து பாதுகாப்புப் பெற...**

* எப்போதும் முழு நீளக்காற்சட்டைகளையும், முழு நீளச் சேட்டையும் அணியுங்கள்.
* நுளம்பினை விரட்டக்கூடிய மணமுள்ள எண்ணெய் வகைகளை (தேங்காய் எண்ணெய்,புல் எண்ணெய்) உடலுக்கு பூசுங்கள்

*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வரவேற்கத்தக்க வரிக் குறைப்பு

புதியஅரசதலைவர்கோத்தபாயராஜபக்சவின்முதலாவதுஅமைச்சரவைக்கூட்டம்நேற்றுநடந்தது. இதில்அதிரடியாகவரிக்குறைப்புக்கள்செய்யப்பட்டுள்ளன.

பெறுமதி சேர் வரி உட்படப் பல வரிகளும் குறைக்கப்பட்டன. இது ஒரு தேர்தல்காலநடவடிக்கைஎன்கிறவிமர்சனங்கள்ஒருபக்கம் இருந்தாலும்தொடர்ந்துஅதிகரித்துவரும்பொருள்களின்விலைஉயர்வுகளால் சோர்வடைந்துள்ளமக்களுக்குஇந்தவரிவிலக்குகள்நிச்சயம்மகிழ்ச்சி தரும்செய்தியே.

பெறுமதி சேர் வரி 15 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மக்களின் அன்றாட வாழ்க்கையில் இந்த வரியின் தாக்கம் மிகக் காத்திரமானது. இந்த வரிக் குறைப்பின் மூலம் நாளாந்தப்பயன்பாட்டுப்பொருள்களின்விலைகள், போக்குவரத்துச் செலவு, தொலைபேசிக் கட்டணங்கள் என்பன குறையும் என்று எதிர்பார்க்கலாம்.

அண்மைய மாதங்களில் பொருள்களின் விலைகள் கிடுகிடுவென உயர்ந்துவிட்டன. கட்டுப்பாடற்ற இந்த விலை அதிகரிப்புக்களால் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. இந்த வரி சரிஅரைவாசியாகக்குறைக்கப்பட்டிருப்பதுபொருள்கள், சேவைகள் விற்பனைவிலைகளையும்நிச்சயம்குறைக்கும். அப்படிக்குறைக்கப்படுவதை ஆட்சியாளர்கள் உறுதிப்படுத்தவும் வேண்டும்.

ராஜபக்சக்கள்பெற்றகடன்களைத்திருப்பிச்செலுத்தவேண்டுமானால் வரி விதிப்பை மக்கள் தாங்கித்தானாக வேண்டும் என்று முன்னைய ஆட்சியாளர்கள் காரணம் தெரிவித்து வந்தார்கள். அதனால் எல்லா வரிகளையும் மிக உயர்வாகவே பேணி வந்தார்கள்.

எனவே இந்த வரிக் குறைப்பின் மூலம் ஏற்படப்போகும் நிதி இழப்பை எப்படிச் சரி செய்வார்கள் என்பது பற்றி அமைச்சரவை எதனையும் தெரிவிக்கவில்லை.

ஆனால், தனது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியளித்தபடி வரிகளை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச குறைத்துள்ளமை பாராட்டுக்குரியது. பொதுத் தேர்தல் ஒன்றுக்கு இன்னும் நான்கு மாதங்கள் மட்டுமேஇருக்கும்நிலையில்இந்தவரிக்குறைப்புஅரசியல்நோக்கங்களைக்கொண்டது என்பதை மறுக்க முடியாது எனினும் இடைக்கால நிவாரணமாகவாவதுவரிக்குறைப்புமக்களுக்குநன்மைதரும்என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியே.

பெறுமதிசேர்வரிகுறைக்கப்பட்டிருக்கிறது. நாட்டைக் கட்டியெழுப்பும் வரி, உழைக்கும்போதே செலுத்தும் வரி, பிடித்து வைத்தல் வரி என்பனவும் குறைக்கப்பட்டிருக்கின்றன.

சில வரிகள் முற்றாகவே நீக்கப்பட்டிருக்கின்றன என்பதும் மகிழ்ச்சியான செய்தி.


மக்களுக்கான புதிய யுகம் ஒன்றைத் தான் கொண்டு வருவார் என்று அதிபர் கோத்தபாய ராஜபக்ச வாக்குறுதியளித்திருந்தார். அதனை நிறைவேற்றும் வகையில் வரிக் குறைப்பு நடவடிக்கையில் அவர் உடனடியாக இறங்கியிருப்பது பாராட்டுக்குரியது.

ஆனால், நாட்டின் ஒட்டுமொத்தக் கடன்களையும் திருப்பிச் செலுத்துவத்துவதற்கு ஆதாரமான வரிகள் நீக்கப்பட்டிருக்கும் நிலையில், நாட்டின்பொருளாதாரஅபிவிருத்திஎந்தக்கட்டத்தைஅடையக்கூடும் என்பதிலும் அவதானம் தேவை. இழப்பீட்டைச் சமாளிக்க மீண்டும் மீண்டும் கடன் வாங்கும் உத்தியைக் கடைப்பிடிப்பது சரியானதல்ல என்பதை ஆட்சித்தலைவர்கள் உணரவேண்டும்.

பிராந்தியமற்றும்மேற்குநாட்டுவல்லரசுகளின்கழுகுப்பார்வைக்குள் சிக்கிக்கொள்ளாமல் இலங்கையைக் காப்பாற்றுகின்ற அதேவேளை மக்கள் நலத் திட்டங்களையும் அறிமுகப்படுத்த வேண்டியிருப்பது பெரும்சவாலானவிடயம். அந்தச்சவாலில்தான்முன்வைத்தகாலை ஆட்சியாளர்கள்எக்காரணம்கொண்டும்பின்வாங்கக்கூடாது.

# நேர்மையான ஆட்சியாளரே இன்று நாட்டுக்குத் தேவை

■ சேரலாதன்



கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நாட்டை ஆட்சி புரிந்தவர்களால் நாடு முன்னோக்கிய பாதையில் பயணிக்கவில்லை என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். 70 ஆண்டுகள் என்பது ஒரு நாட்டின் வரலாற்றில் மிக நீண்ட காலமாகும். ஆட்சியாளர்கள் நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றியிருந்தால் இந்த நாடு எப்போதோ சொர்க்கபுரியாக மாறியிருக்கும். ஆனால் எல்லாமே எதிர்மறையாகவே நடந்து முடிந்து விட்டன.

### கட்சி அரசியலால் ஆன பயன் ஏது?

ஜனநாயகத்தின் வழிவந்தது கட்சி அரசியல் எனக் கூறப்பட்டாலும் மாறிமாறி ஆட்சிக்கு வருவதைத் தவிர அரசியல்வாதிகளால் வேறு எதையும் உருப்படியாகச் செய்ய முடியவில்லை. இதில் ஊழல் மற்றும் மோசடிகள் அதிகளவில் இடம்பெற்றதால் நாடு சூறையாடப்படுவதற்கும் குறைவில்லாத நிலைதோன்றியது. இதனால் பொருளாதாரம் சீர்குலைந்ததொடு மக்கள் வறுமை நிலைக்குள்ளும் தள்ளப்பட்டனர். நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுக்கு நீண்ட காலமாக இடம்பெற்ற போரைக் காரணமாகக் கூறினாலும் அதற்கு அப்பாலும் பல விடயங்கள் இருக்கத்தான் செய்தன. இவை யாவுமே அரசியல்வாதிகளுடன் தொடர்புபட்டவை என்பதை மறுக்க முடியாது.

தற்போது புதிதாக அரச தலைவர் பதவியில் அமர்ந்துள்ள கோத்தபாய ராஜபக்ச தாம் தூய ஆட்சியொன்றை ஏற்படுத்தப் போவதாகவும், அனைத்து இன மக்களும் தமக்கு ஆதரவை வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்திருந்தார். மேலும் தம்மையொரு சர்வாதிகாரியாக அடையாளப்படுத்த வேண்டாமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

சர்வாதிகாரி எனும்போது ஹிட்லர், இடிஅமீன் ஆகியோர்தான் மனதில் எழுகின்றனர். ஜெர்மனியை ஆட்சி புரிந்த ஹிட்லர் ஒரு கொடிய சர்வாதிகாரியாகவே செயற்பட்டார். இவரை எதிர்த்த எவருமே உயிருடன் இருக்க முடியவில்லை. உலகம் முழுவதையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டுவர வேண்டுமென்பதே ஹிட்லரின் இலட்சியமாக. இருந்தது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றைத் தனது காலடியின் கீழ் கொண்டுவந்த ஹிட்லருக்கு ரஷ்ய தேசம் சாவுப் பொறியாக மாறியது. இதைப் போன்று உகாண்டா நாட்டின் சர்வாதிகாரியான இடிஅமீன் புரிந்த அட்டூழியங்கள் ஏராளம். இறுதியில் அவரும் நாட்டை விட்டுத் தப்பியோட வேண்டியதாயிற்று.

### இதுவரையில் சாத்தியமாகாத அரச தலைவரின் அதிகாரக்குறைப்பு

ஒரு சர்வாதிகாரிக்குச் அனைத்து அதிகாரங்களும் இருத்தல் வேண்டும். அதைவிட வழங்கப்பட்ட அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தி சர்வாதிகாரத்தை நிலைநாட்டுபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். எமது நாட்டைப் பொறுத்தவரையில் அரச தலைவருக்கு. எல்லையில்லாத நிறைவேற்று அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர் ஒரு சர்வாதிகாரியாகச் செயற்படுவதற்கு இந்த அதிகாரங்களே போதுமானவை. நீதிமன்றங்களுக்குப் பதில்கூற வேண்டிய பொறுப்பும் இந்த நாட்டின் அரச தலைவருக்குக் கிடையாது. அரசமைப்பின் ஊடாக அரச தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்களை மீளப் பெற வேண்டுமென்ற கோரிக்கைகள் அவ்வப்போது எழுவது வழக்கமாகிவிட்டபோதிலும் நடைமுறையில் இதுவரையில் சாத்தியமாகவில்லை. ஒருமுறை சந்திரிகா அம்மையார் அரசதலைவர்தேர்தலில்போட்டியிட்டபோது தாம் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்று அதிகாரங்களை இல்லாமல் செய்வதாக உறுதியளித்தார். இதை நம்பிய மக்கள் விடுதலை முன்னணியினர் அந்தத் தேர்தலில் சந்திரிக்காவுக்கு ஆதரவை வழங்கினார். ஆனால் பதவிக்கு வந்ததும் சந்திரிக்கா அம்மையார் தாம் வழங்கிய வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டார். இவ்வாறுதான் காலத்துக்குக் காலம் அரசியல்வாதிகள் உறுதி மொழிகளை வழங்குவதும் பின்னர் அவை மீறப்படுவதும் வழமையாகிவிட்டன.

கோத்தபாய ராஜபக்ச நாட்டிலிருந்து இனவாதம், மதவாதம், ஊழல், மேசடிகள், அரச நிதியை தவறாகப் பயன்படுத்துதல், அப்பாவி மக்களுக்கு எதிரான குற்றச் செயல்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சிறுவர் துர்நடத்தை, போதைப்பொருள்களின் விற்பனை பற்றும் பாவனை, திருட்டு, கொள்ளை, அடாவடித் தனங்கள், மத நல்லிணக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள், பயங்கரவாதச் செயல்கள் ஆகியவற்றை அடியோடு களைந்துவிடுவதற்குத் தம்மையொரு நேர்மையான சர்வாதிகாரியாக மாற்றிக் கொள்வதில் தவறொன்றும் கிடையாது என்பதைக் கூறித்தானாக வேண்டும். இன்று நாடு உள்ள நிலையில் சாதாரண சட்டங்களால் அதைக் கட்டுப்படுத்த முடியுமெனக் கூற முடியவில்லை. மக்களிடம் சட்டத்தை மதிக்கின்ற தன்மையும் குறைந்து செல்கின்றது. அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரங்கள் நேர்மையாகவும், பக்கச்சார்பின்றியும்பயன்படுத்தப்படுமானால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவே செய்யும். ஆனால் இந்த நாட்டில் அவ்வாறு நடப்பதில்லை. பக்கச் சார்பான முறையில் அவை பயன்படுத்தப்படுவதையே காணமுடிகின்றது.

எனவே புதிய அரச தலைவர் நாடு தொடர்பாக உறுதியான தீர்மானமொன்றை எடுக்க வேண்டிய கட்டாய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார். அவர் தமது சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி நேர்மையான வழியில் நாட்டை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். இங்கு வாழ்கின்ற சகல இன மக்களும் நிம்மதியாகவும், மன நிறைவுடனும் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதும் அரச தலைவரின் முக்கிய பொறுப்பாகும். இதை நிறைவேற்றி வைத்தால் நாடு தானாகவே அபிவிருத்திப் பாதையில் செல்லும்.

இந்துமதி

# மதவாதம் இனவாதம் ஒழியும்வரை நாடு பின்னடைவையே சந்திக்கும்


நாடுமுழுவதும் 20 ஆயிரம்பேரைக் கொண்ட பௌத்த பிக்குகளின் படையொன்று உள்ளதாகவும், நடந்து முடிந்த அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றியடைந்தமைக்கு காவியுடை தரித்தவர்களே காரணமென வும் தேரர் ஒருவர் இறுமாப்புடன் தெரிவித்துள்ளமை இந்த நாட்டின் மீதான பௌத்த மதத்தின் ஆதிக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது.

**அரசியலும் பௌத்தமும் இரண்டறக் கலந்துள்ளன**

பல்லின மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதப் பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் பௌத்த மதத்தைக் கடைப்பிடிக்கின்ற மக்களே அதிகளவில் உள்ளனர். இதற்கு ஏற்றாற்போன்று காவியுடை தரித்த பௌத்த பிக்குகளின் எண்ணிக்கையும் பல ஆயிரங்களாகப் பெருகிக் காணப்படுகின்றது. கிராமங்கள் தோறும் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளதால் அங்கு வாழ்கின்ற மக்கள் பிக்குகளுக்குத் தகுந்த மரியாதை செலுத்தி வருகின்றனர். அது மட்டுமல்லாது தேரர்களின் வார்த்தைகளுக்கு மறுவார்த்தை கூறாது அவற்றை ஏற்றுக் கொள்ளுகின்ற பக்குவமும் அந்த மக்களிடம் காணப்படுகின்றது. இந்த நாட்டைப் பொறுத்தவரையில் அரசியலும் பௌத்த மதமும் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. அரசியல்வாதிகள் பௌத்த மதப் பீடங்களுக்கு எதிராக எதையுமே மேற்கொள்வதில்லை. பௌத்த பீடாதிபதிகளின் ஆலோசனையின் பிரகாரமே ஆட்சியாளர்களும் நடந்து கொள்கின்றனர். துரதிஷ்டவசமாக காவியுடை தரித்தவர்களில் ஒரு தொகுதியினர் தமது மதக் கோட்பாடுகளுக்கு அமைவாகச் செயற்படுவதாகத் தெரியவில்லை. இதற்கு உதாரணமாக ஞானசார தேரர் போன்றவர்களைக் கூறமுடியும். இவர் போன்றவர்களால் நாட்டில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகின ஆனால் பௌத்த மதபீடங்கள் இவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் ஞானசாரதேரர் போன்றவர்கள் தமது அடாவடி செயல்களைத் தொடர்ந்து மேற்கொள்கின்றனர்.

**மியன்மார் நாடு சொல்லும் பாடம்**

மத தீவிரவாதம் காரணமாக மியன்மார் நாட்டில் இடம்பெற்றதை இந்த உலகு அறியும். அந்த நாட்டில் வசிக்கின்ற சிறுபான்மையினத்தவர்களான முஸ்லிம் மக்கள் பௌத்தர்களால் மோசமாகத் துன்புறுத்தப்பட்டனர். ஏராளமானவர்களைக் கொலை செய்யவும் மதவாதிகள் தயங்கவில்லை. இதன் காரணமாக முஸ்லிம் மக்கள் அந்த நாட்டிலிருந்து வெளியேறி பிற நாடுகளில் தஞ்சமடைய வேண்டிய அவலநிலை உருவானது. இதனால் மியன்மார் அரசு பன்னாட்டு அளவில் கண்டனங்களுக்கு ஆளானது. இதே போன்றதொருநிலை உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அரசின் தலையாய கடமையாகும். சிங்கள பௌத்த இனவாதிகள் தற்போதைய அரசின் ஆட்சிக் காலத்தில் கூர்மை பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகமாகவே காணப்படுகின்றன.



புத்த பெருமானால் உருவாக்கப்பட்ட பௌத்த மதம் உயர்ந்த கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது. அன்பு, கருணை, பொறுமை ஆகியவை இதன் அடிப்படைத் தத்துவங்களாகும். மூப்பு, நோய், சாவு ஆகியவற்றை நேரில் கண்ட புத்தர் உலக இன்பங்கள் யாவற்றையும் துறந்து துறவியானார். அன்பும், கருணையும் அவரது போதனைகளில் பிரதான இடத்தை வகித்தன. அவரை அடியொற்றிச் செல்பவர்களும் இவற்றைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம் சமூதாயத்தினர் மீதான வெறுப்பும் சந்தேகமும் நாட்டில் பல மடங்காக அதிகரித்துவிட்டன. நடைபெற்று முடிந்த அரச தலைவர் தேர்தலில் முஸ்லிம்களின் பிரதான தலைவர்களாகக் கருதப்படும் ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் ஆகியோர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து நின்றனர். அதாவுல்லா போன்றவர்கள் மகிந்த தரப்புக்கு ஆதரவை வழங்கினர். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைக்கும் போதெல்லாம் ஹக்கீமும், ரிசாத்தும் அமைச்சுப் பொறுப்புக்களை வகிப்பது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இந்தமுறை சஜித்தின் தோல்வியைத் தொடர்ந்து ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பதவி துறந்தது.

இதனால் புதிதாகத் தெரிவான அரச தலைவரான கோத்தபாய புதிய இடைக்கால அமைச்சரவையை ஏற்படுத்திக் கொண்டார். இதில் இரண்டு தமிழர்களுக்கு இடம் கிடைத்தது. வடக்கில் இருந்து டக்ளஸ் தேவானந்தாவும் மலையகத்தில் இருந்து ஆறுமுகன் தொண்டமானும் அமைச்சரவையில் இடம்பிடித்துள்ளனர். ஆனால் முஸ்லிம்கள் எவருமே அமைச்சரவையில் இடம்பெறவில்லையென்பது சிந்திக்க வேண்டியதொரு விடயமாகும்.

> மதவாதமும், இனவாதமும் இனியும் நாட்டில் தலை தூக்குவதை அனுமதிக்க முடியாது. அதிலும் சிறுபான்மையினத்தவர்களிடையே இனவாத ரீதியிலான சிந்தனைகள் எழுவதும் வார்த்தைப் பயன்பாடுகள் இடம் பெறுவதும் ஏற்றுக் கொள்ள முடியாது

**சிறுபான்மை மக்களிடத்தில் ஒற்றுமை இருத்தல் அவசியம்**

மதவாதமும், இனவாதமும் இனியும் நாட்டில் தலை தூக்குவதை அனுமதிக்க முடியாது. அதிலும் சிறுபான்மையினத்தவர்களிடையே இனவாத ரீதியிலான சிந்தனைகள் எழுவதும் வார்த்தைப் பயன்பாடுகள் இடம்பெறுவதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒரு முஸ்லிம் அரசியல்வாதியான அதாவுல்லா மலையக மக்கள் தொடர்பாகப் பயன்படுத்திய வார்த்தைகள் அருவருக்கத்தக்கன. ஒரு மூத்த அரசியல்வாதியான மனோகணேசன் அதாவுல்லாவின் வார்த்தைகளைப் பொறுக்க முடியாமல் அவரது முகத்தில் நீரை வீசும் அளவுக்கு அதாவுல்லா மோசமாக நடந்துள்ளார். அவர் தமிழ் மக்களுக்கு விரோதமான கருத்துக்களை வெளியிடுவதிலும் முன் நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையினத்தவர்கள் மதிக்க வேண்டுமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

படை முகாம்கள் எங்கே அமைந்திருக்க வேண்டுமென்பதை 20 ஆண்டுகளாக ஓர் இராணுவ அதிகாரியாகவும் நீண்ட காலம் பாதுகாப்புச் செயலராகவும் கடமையாற்றிய தற்போதைய அரச தலைவர் நன்கறிவார்.

இந்த நிலையில் வடக்குக் கிழக்கிலிருந்து இராணுவ முகாம்களை அகற்ற வேண்டாமென பௌத்த தேரர் ஒருவர் அரச தலைவருக்கு ஆலோசனை வழங்குவது தேவையற்றதொரு செயலாகும். புதிய அரச தலைவர் நாட்டில் அமைதியையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்த வேண்டுமென்றால் முதலில் மதவாதத்தையும், இனவாதத்தையும் முற்றாகவே ஒழிக்க வேண்டும்.

---

## உதயனின் தோற்றம் தனித்துவமானது



உதயன் 35 ஆவது அகவைக்குள் காலடி எடுத்துவைத்துள்ளான். தமிழ் மக்களின் வரலாற்றில் உதயனின் தோற்றமும் வளர்ச்சியும் பதிவுகளும் தனித்துவமானவை. நெருப்பாற்றில் நீந்திய வரலாறு உதயனுக்குரியது. 35 ஆண்டுகள் வெறும் எண்ணிக்கைக் கணக்கல்ல. ஒவ்வொரு நாளும் வருடமாக கழிந்த கசப்பான அனுபவங்களை உதயன் பெற்றிருக்கிறான் என்பது மிகையன்று. இந்நாளில் உதயன் இன்னும் பல பரிமாணங்களை அடைய உதயனுடாக நாமும், நாடும் பல உயர்வுகளை பெற வாழ்த்தி, தனக்கே உரித்தான மிடுக்குடன் உதயன் தொடர்ந்தும் பயணிப்பான் என்ற அசையா நம்பிக்கையுடன் துடிப்பாகிய உதயனுடன் தொடர்ந்தும் நாம் பயணிக்க இறைவன் அருள்வானாக!

நா.துஷாந்

## ஈழத்தமிழர்களின் உரிமைக்குரலாய் ஓய்வில்லாமல் ஓங்கிஒலித்துக்கொண்டிருக்கிறது உதயன் பத்திரிகை



கடந்த போர்காலத்தில் உதயன் பத்திரிகை தமிழ் மக்களுக்கு ஆற்றிய சேவையை அவ்வளவு எளிதில் எவரும் மறந்து விட முடியாது. பெறுமதி மிக்க உயிர் உடமை சொத்திழப்பிற்கு மத்தியிலும் ஒரு பீனிக்ஸ் பறவைபோல எழுந்து தனது ஊடக சேவையினை தமிழ் மக்களுக்கு வழங்கிவரும் உதயன் பத்திரிகையை தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரும் நேசக்கரம் நீட்டி பாதுகாக்க வேண்டும். தவறைத் தட்டிக் கேட்பதிலும் அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பதிலும் அரசியல் விமர்சனங்களை அச்ச உணர்வுகள் துளியும் இல்லாமல் முன் வைப்பதிலும் உதயன் பத்திரிகைக்கு நிகர் உதயன் பத்திரிகை தான் என்றால் மிகையாகாது. ஏழைஎளிய மக்களின் சமூகப்பிரச்சனைகளை ஆராய்ந்து அவற்றிற்கு தீர்வை நோக்கிய செய்தியாக பிரசுரிப்பதிலும் ஊடகதர்மத்தைக் கடைப்பிடித்து நடுநிலை தவறாது செயற்படும் உதயன் பத்திரிகை தனது 35வது ஆண்டில் காலடி வைப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் மேலும் பல நூறு ஆண்டுகள் தமிழ் பேசும் மக்களுக்கான சேவையைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று ஈழத்தமிழ் மக்கள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.சிவமோகன்,
வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்.

# யாழ்ப்பாணத்தில் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பு மருந்து கையிருப்பில் இல்லை

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ்ப்பாணம் குடாநாட்டில் தற்போது டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளதால், நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த விசிறும் நாசினி கையிருப்பில் இல்லை என்று மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர். அதனால் மாநகர சபையின் நிதியில் தனியாக நாசினி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மாநகர சபை எல்லைப்பகுதியில் தற்போது டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் இனம் காணப்படும் நோயாளரின் இல்லம் மற்றும் நோயாளியின் இல்லத்தைச் சூழவுள்ள இல்லங்களுக்குப் புகை விசுறுவது வழமையான செயல்பாடுகளாகும். இந்த நிலையில் தற்போதுயாழ்ப்பாணக்குடாநாட்டுக்குள் டெங்குத்தாக்கம் அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாக மாநகர சபை எல்லைப்பரப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றது.

இதன் காரணமாக டெங்கின் தாக்கத்தின் எண்ணிக்கைக்கு ஏற்ப புகை விசுறும் பணியை அதிகரிப்பதற்குத் தேவையான அளவு மருந்தை யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரியிடம் கோரிய போது, மாவட்டத்தில் கையிருப்பில் இருந்த மருந்து முடிவடைந்து விட்டதாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த புகை மருந்தின் தேவை கருதி மாநகர சபையால் சபை நிதியில் இருந்து குறித்த மருந்து கொள்வனவு செய்யப்பட்டு மேற்படி பணி தொடர்கின்றது என்று மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-105)





## சமாதானத்தை வலியுறுத்திய நடை பயணம் வந்தடைந்தது

வவுனியா,நவ.28

நாட்டில் இனங்களுக்கிடையிலான சமாதானத்தை வலியுறுத்தி யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் வரையில் படையினரால் ஆரம்பிக்கப்பட்ட நடை பயணம் நேற்று வவுனியாவை வந்தடைந்தது

யாழ்ப்பாணம் நயினாதீவில் அமைந்துள்ள நாக விகாரையில் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட குறித்த நடை பயணம் கதிர்காமத்தில் நிறைவடைய உள்ளது. பயணம் ஆரம்பித்து நான்காம் நாளான நேற்று வவுனியாவை வந்தடைந்ததுடன் மதவாச்சி பகுதியுடன் முடிவடைந்தது. (ஐ-110)





கலைஞர் சுவதம் வேலைத்திட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகார சபையால் மூத்தகலைஞர்கள் சிலர் அவர்களது வீடுகள் தேடிச் சென்று நேற்று முன்தினம் மதிப்பளிக்கப்பட்டனர். (க-7)

## பரிசளிப்பு நிகழ்வு

தென்மராட்சி,நவ.28

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மைவிருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. கந்ததாசன், சிறப்புவிருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் க.வேணுகோபன், ஓய்வு பெற்ற அதிபர் ஐ.வரதராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ 9)

## மாற்று திறனாளிகள் தினம்

யாழ்ப்பாணம்,நவ.28

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் நடத்தும் பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தினம் எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில்இடம்பெறும். கருவியின் செயலாளர் து.யசிந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞான பீடங்களின் பீடாதிபதி கணிதவியற் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் மாகாணப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர். (க)



## காங்கேசன்துறையில் பொலிஸார் சிரமதானம்

பொலிஸாரின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை பிரதேசத்தைச் சுத்தப்படும் சிறப்புச் செயற்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அரச தலைவர் கோத்தாபய ராஜபக்சவின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடு முழுவதும் சுற்றுச் சூழலை சுத்தப்படுத்தும் பணியில் பொலிஸ் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

அதற்கமைவாக தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து இந்தச் செயற்திட்டத்தை முன்னெடுத்தன.

குறித்த செயற்திட்டத்தில் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் 200 க்கும் மேற்பட்ட பொலிஸார் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபை.ஊழியர்கள், தெல்லிப்பழை மருத்துவ மனையினர் பங்குபற்றினர். (க-26)





## திறன் வகுப்பறை திறப்பு

முல்லைத்தீவு,நவ.28

முல்லைத்தீவு வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் முதலாவது திறன் வகுப்பறை நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் த.மயூரன் ஆசிரியர் ஆகியோரின் நிதிப்பங்களிப்புடன் இந்த வகுப்பறை திறந்துவைக்கப்பட்டது.



நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ச.கனகரட்ணம், கரைதுறைப்பற்று பிரதேச சபை துணைத் தவிசாளர் தி. இரவீந்திரம், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் இ. ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-222)

## கட்சி தாவிய தவிசாளரின் பாதீடு நெடுந்தீவில் தோற்கடிப்பு

நெடுந்தீவு பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான பாதீடு தோற்கடிக்கப்பட்டுள்ளது. பிரதேச சபையின் இந்த மாத அமர்வு நேற்று இடம்பெற்றது. பாதீடு மீதான வாக்கெடுப்பு நடந்தது.

இதில் எதிராக 9 வாக்குகளும், ஆதரவாக 1 வாக்கும் பதிவாகின. நெடுந்தீவுப் பிரதேச சபை தமிழ்த் தேசியத் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதன் தவிசாளர் பற்றிக் றொசான் அண்மையில் கட்சி தாவி, அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவளித்தார். கட்சியை ஏமாற்றிச் சென்ற தவிசாளருக்கு பாடம் படிப்பிக்கவுள்ளதாகத் தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், பாதீட்டைக் கூட்டாக எதிர்த்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 3, ஐ.தே.க 1, ஈ.பி.டி.பி 3, சுயேச்சை 2 ஆகியோர் பாதீட்டை எதிர்த்தனர். ஈ.பி.டி.பியின் உறுப்பினர்கள் மற்றைய 3 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். தவிசாளர் தனித்து வரவு-செலவு திட்டத்தை ஆதரித்தார். (ஒ.5)

# ஐயங்கன்குளம் படுகொலையின் 12 ஆவது ஆண்டு நினைவேந்தல்

முல்லைத்தீவு,நவ.28

முல்லைத்தீவு துணுக்காய் ஐயங்கன் குளம் பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 12 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.



கடந்த 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதியன்று ஐயன்கன்குளத்திலிருந்து மல்லாவி நோக்கிப் பயணித்த நோயாளர் காவு வண்டிக்கு, ஐயங்கன் குளம், அம்பலவி வெட்டை என்ற இடத்தில் இலங்கை இராணுவத்தால் கிளைமோர்த் தக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இராணுவத்தினரின் தாக்குதலால், அந்த நோயாளர் காவுவண்டியில் பயணித்த முதலுதவி கற்கைநெறிகளைப் பயின்ற மாணவிகளான நாகரத்தினம் பிரதீபா (வயது16), நாகரத்தினம் மதிகரன் (வயது15), நித்தியானந்தன் நிதர்சனா (வயது13), கருணாகரன் கௌசிகா (வயது15), சந்திரசேகரம் டிறோஜா (வயது16), அற்புதராசா அஜித்நாத் (வயது17)ஆ கிய ஆறு மாணவிகள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் சண்முகவடிவேல் சகுந்தலாதேவி (வயது19), மாரிமுத்து கிருஸ்ண வேணி (வயது21) ஆகியோருமாக எட்டுப்பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்களுக்கான நினைவேந்தல் படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற பகுதியான ஐயங்கன்குளம், அம்பலவி வெட்டைப் பகுதியில் இடம்பெற்றது.

துணுக்காய் பிரதேசசபை உறுப்பினர் சற்குணநாதன் சுயன்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மைச் சுடரேற்றப்பட்டதுடன், படுகொலை செய்யப்பட்டவர்களைப் புதைத்த இடத்தில் அவர்களுடைய திரு உருவப் படம் வைக்கப்பட்டு, உறவினர்களால் விளக்கேற்றப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

படுகொலைச் சம்பவத்தில் இரு பிள்ளைகளை இழந்த தாயாரான நாகரத்தினம் வசந்தமல்லிகா, அஞ்சலி நிகழ்வில் பொதுச்சுடரை ஏற்றினார்.

அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து, படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அவர்களின் உறவினர்களுக்கு, அஞ்சலி நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களது உறவினர்கள், ஐயன்கன்குளம் கிராம மக்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-246)

## சாரதிகள் ஐவருக்கு தண்டம்

சாவகச்சேரி,நவ.28

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்கள் செலுத்திய சாரதிகள் 5 பேருக்கு ஒரு லட்சத்து 52 ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டம் வி திக்கப்பட்டது. சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதி மன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்ப ட்டன. சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகனவரிச் சான்றிதழ் ஆகியவையின்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 52 ஆயிரத்து ஐநூறு ரூபாவும், மது போதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு ம் சாரதிய அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி,நவ.28


ஞானச்சுடர் ஆன்மிகச் சஞ்சிகையின் இந்த மாதத்துக்கான இதழ் வெளியீட்டு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆச்சிரமப் பொறுப்பாளர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வெளியீட்டுரையை ஓய்வுநிலை அதிபர் ச. நவரத்தினராசாவேலும், மதிப்பீட்டுரையை ஏழாலை சிறி முருகன் வித்தியாலய அதிபர் செ. பரமேஸ்வரனும்நிகழ்த்துவர். தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் மா தாந்தோறும் ஞா னச்சுடர் என்ற ஆன்மிகச் சஞ்சிகை வெளியிடப்பட்டுவருகிறது. இச் சஞ்சிகை 263 ஆவது மலராக வெளியிடப்படவுள்ளது. (ஐ-173)

## கழிவு வாய்க்கால்களில் மீட்கப்பட்ட போத்தல்கள்



யாழ்ப்பாணம்,நவ 28

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுத்தப்படு த்தும் சிறப்புச் செயற் திட்டத்தின் போது கழிவுநீர் வாய்க்கால்களில் இருந்து அதிகளவு பிளாஸ்ரிக் போத்தல்கள் மீட்கப்பட்டன. அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடுமுழுவதும் சுற்றுச் சூழலைச் சுத்தப் படுத்தும் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் மற்றும் பிரதேச செயலகம், மாநகர சபை ஆகியன இணைந்து இந்தச் செயற்திட்டத்தை யாழ்ப்பாணம் நகர் பகுதியில் முன்னெடுத்தன. இந்தச் சுத்த படுத்தும் வேலை திட்டத்தின் போது கழிவு நீர் ஓடும் கால்வாய்களில் இருந்து அதிகளவு பிளாஸ்ரிக் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன. (க-7)



உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையின் ஒளி விழாவும், பரிசளிப்பு விழாவும் கடந்த வாரம் பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது. (க-70)

## பயன்தரு மரங்களில் புதிய வகை நோய்

யாழ்ப்பாணம்,நவ.28

யாழ்ப்பாண மாவட்டத்தில் மா ,பலா ,வேம்பு ஆகிய மரங்களில் புதிய வகை நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது என்றுமாவட்டச்செயலகவிவசாயபிரிவுதெரிவித்துள்ளது. மரங்களைத் தாக்கும் இந்த நோயின் தாக்கம் மரத்தின் உச்சியில் இருந்து ஆரம்பித்து மரத்தைப் படிப்படியாக அழிக்கும் நிலைமைக்குத் தள்ளும். மரத்தின் இலைகள் சிறியதாகக் காணப்படுதல், மரக் கொப்புகளில் பழுப்பு நிறம்தெரிதல், பழங்கள் காய்ப்பது குறைதல் போன்ற அறிகுறிகள் இந்த நோய் தாக்கத்தின் அறிகுறியாக கண்டறியப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இந்த நோய்த் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பில் கண்டறிவதற்கு விவசாய பிரிவின் அதிகாரிகள் தற்போது களத்துக்குச்சென்று ஆராய்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## வல்லைப் பாலத்துக்குள் பாய்ந்தது படி வாகனம்

யாழ்ப்பாணம், நவ. 28

வேகக் கட்டுப்பாட்டை இழந்த படி வாகனம் வல்லைப் பாலத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது அது விபத்துக்கு ள்ளாகியது. சாரதி மற்றும் பயணித்த இருவரும் வாகனக் கதவின் கண்ணாடி வழியாக வெளியே வந்துள்ளனர். எவருக்கும் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை. இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணை நடத்தினர். (த-422)

## தற்காப்பு சிலம்ப வகுப்புக்கள் புதுக்குடியிருப்பில் ஆரம்பம்



முல்லைத்தீவு, நவ. 28

மாவட்டம் தழுவிய பாடசாலை மாணவர்களுக்கான தற்காப்பு சிலம்ப வகுப்புக்கள் புதுக்குடியிருப்பில் ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சிலம்ப சங்கச் செயலர் பாபு மாஸ்ரர் இந்த வகுப்புக்களைஆரம்பித்துள்ளார். வடக்கு கிழக்கு மாகாணம் தழுவியரீதியில் மாணவர்களிடையே தற்காப்பு கலை சிலம்பக்கலையை ஊக்கிவிக்கும் நோக்கில் முதற்கட்டமாக முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்குப்புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் இந்தக்கலைகள் ஊடாக நல்ல பாதையில் செல்லவேண்டும் என்ற நோக்குடன் இந்தப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இலவசமாகவே இந்தக் கலை பயிற்றுவிக்கப்படவுள்ளது. முதற்க ட்டமாக 200 மாணவர்களுக்கு கராத்தே சிலம்பம் பயிற்சிஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பாபு மாஸ்ரர் தெரிவித்தார். (ஐ-ரி3)

## தேர்வுகள் இன்று

யாழ்ப்பாணம்,நவ.28

சைவபரிபாலன சபையால் நடத்தப்படவிருந்த சைவநெறி, தமிழ்மொழித் தேர்வுகள் இன்று வியாழக்கிழமை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்பார்வையாளர்கள் வினாத்தாள் பொதிகளை இணைப்பு நிலையங்களிருந்து பெற்று பரீட்சைமுடிவடைந்ததும் அன்றைய தினமே விடைத்தாள் பொதிகளை இணைப்பு நிலையத்தில் ஒப்படைத்துதவும்படியும் சைவபரிபாலன சபை தேர்வுச் செயலர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

## வலி. கிழக்குப் பிரதேசத்தில் வெங்காயச் செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.28

வலி. கிழக்குப் பிரதேசத்தில் விவசாயிகள் பரவலாக மேற்கொண்ட வெங்காயச் செய்கை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொட்டித் தீர்த்த கனமழையால் தாழ்ந்த இடங்களில் நடுகை செய்யப்பட்ட வெங்காயப் பயிர்களே வெள்ளத்தில் மூழ்கிப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டுக்கான பெரும்போக வெங்காயச் செய்கை யாழ்ப்பாணத்தில் அதிக பிரதேசங்களில் விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புன்னாலைக்கட்டுவான், ஊரேழு, இடைக்காடு, நவக்கிரி போன்ற இடங்களில் விவசாய நிலங்களைச் சரிசெய்து பெருமளவான விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். சின்ன வெங்காயத்தின் விலையேற்றமும் விவசாயிகளை அதிகம் பயிர் செய்யத் தூண்டியிருந்தது.

எனினும் நேற்று முன்தினம் கொட்டிய கனமழை வெங்காயச் செய்கையாளர்களைப் பெரிதும் பாதித்துள்ளது. தாழ்ந்த நிலங்களில் நடுகை செய்த வெங்காயங்கள் வெள்ளத்தில் மூழ்கி பழுதடைந்துள்ளன. இதனால், பெரும்போக வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு விதை வெங்காயங்களுக்கு தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சின்ன வெங்காயத்தின் விலை அதிகரிப்பைப் பயன்படுத்திச் செய்கையாளர்கள் விதை வெங்காயங்களைச் சந்தைப்படுத்தி வருகின்றனர்.

நேற்றைய திருநெல்வேலி சந்தை நிலவரம்படி ஒரு கிலோ சின்ன வெங்காயம் 380 ரூபாவாக விற்கப்பட்டது. (ஐ-17)

### தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சி

யாழ்ப்பாணம்,நவ.28

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் யாழ்ப்பாணப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் குறிப்பிட்ட சில பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆர்வமுள்ளோர் தமது சுய விபரக்கோவையுடன் இன்றுவியாழக்கிழமைக்கு முன்னதாக விதாதா வள நிலையத்துக்கு நேரில் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் (பழைய பிரதேச செயலக வளாகம்), சென்ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக) அமைந்துள்ள நிலையத்துடன் தொடர்பு கொள்ள மாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (க)

### அத்தியாவசிய கருவிகள் கையளிப்பு

பருத்தித்துறை,நவ.28

பருத்தித்துறை மந்திகை ஆதாரமருத்துவமனை இயன்மருத்துவப் பிரிவுக்கும், நரம்புத் தொகுதி தொடர்பான பிரிவுக்கும் அத்தியாவசியக் கருவிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா. வேதநாயகனால் நேற்றுமுன்தினம் மருத்துவமனைப் பொறுப்பதிகாரியிடம் அவை கையளிக்கப்பட்டன.

மருத்துவமனையின் இயன் மருத்துவப்பிரிவு மற்றும் நரம்பு சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றில் சிகிச்சை பெறவரும் வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் தீவகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள் பிரிவுகளில் போதிய உபகரணங்கள் இல்லாததால் சிரமங்களை எதிர் நோக்கினர்.

இவ்விடயம் தொடர்பாக மருத்துவ மனை நிர்வாகத்தினர் யாழ்ப்பாண மாவட்டச் செயலருடன் தொடர்பு கொண்டு தேவைகளைப் பூர்த்தி செய்து வழங்குமாறு கோரியிருந்தனர்.

இதனையடுத்து மாவட்ட செயலகத்தால் ஒரு தொகுதி உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (ஐ-9)

### கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,நவ.28

தெல்லிப்பழை 'கிட்ஸ் பார்க்' முன்பள்ளியின் கல்விக் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறும்.

முன்பள்ளி நிர்வாகத் தலைவர் ஆர். சேதுநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சு ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் ஜெயா தம்பையா, சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி, தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ் சிவதாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (க)

## ரூ.3 இலட்சம் பெறுமதியான முதிரை குற்றிகள் பறிமுதல்

### இருவர் கைது

கிளிநொச்சி,நவ.28

பெறுமதி வாய்ந்த முதிரைகுற்றிகளை அரிந்து சங்குபிட்டிப் பாலத்தின் ஊடாக யாழ்ப்பாணத்துக்குக் கடத்த முற்பட்ட வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட காட்டுப்பகுதியில் வைத்து வாகனம் நேற்றுக் காலைக் கைப்பற்றப்பட்டது.

கிளிநொச்சி பூநகரி புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய பூநகரிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிக் கடத்த முற்பட்ட வாகனமே பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளின் 3 இலட்சம் ரூபா பெறுமதியானவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் வாகனத்தின் சாரதி மற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பூநகரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)


## நுளம்பு பெருகும் சூழல்; 7 பேருக்கு தண்டம்

சாவகச்சேரி,நவ.28


டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் வகையில் குடியிருப்புகள் மற்றும் காணிகளை வைத்திருந்த 7 பேருக்கு தலா ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பொது சுகாதார பரிசோதகர் ஏற்கனவே அறிவுறுத்தல்களை வழங்கிய போதிலும் அதற்கேற்ப குடியிருப்புகள் மற்றும் காணிகளைத் துப்புரவு செய்யாத குடியிருப்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. குடியிருப்பாளர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)



வடமராட்சி எல்லங்குளத்தில் இடித்தழிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அஞ்சலி செலுத்த முற்பட்டபோது இராணுவத்தினர் தடுத்தனர். அதன்பின்னர் இராணுவ முகாமுக்கு அருகாமையில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிங்கம் தலைமையில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (க-ரி1)



## இந்திய அரசமைக்கு உருவாக்கம் யாழ்ப்பாணத்தில் நினைவுகூரல்

யாழ்ப்பாணம்,நவ.28

இந்திய அரசமைப்பு உருவாக்கப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு, அதனை நினைவு கூரும் நிகழ்வு யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிகழ்வில் ஒளிப்படக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. கண்காட்சியில் இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு 70 ஆண்டுகளில் இடம்பெற்ற நிகழ்வுகள் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில்: யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத்தூதுவர் சங்கர் பாலச்சந்திரன், வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.விகே. சிவஞானம், பொதுமக்கள், மாணவர்கள் கல்விமான்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-7)

### 13 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

முல்லைத்தீவு,நவ.28

கல்வி, பொருளாதார அபிவிருத்தி அமைப்பினால் 13 முன்பள்ளி மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வடக்கு- கிழக்கில், பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள முன்பள்ளிகளுக்கு, கல்வி, பொருளாதார அபிவிருத்தி அமைப்பு கற்றல் உபகரணங்களை வழங்கும் திட்டத்தை வருடாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில்22முன்பள்ளிகளைச் சேர்ந்த 175 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தச் செயற்திட்டத்தின் நான்காம் நிகழ்வாக, முல்லைத்தீவு, செம்மலைக் கிராமத்தின் சரிதா முன்பள்ளியைச்சேர்ந்த 13 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கனடாவில் வாழும் தாயக உறவான க.கனகேஸ்வரன் நிதியுதவி வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-222)

### சுமித்ரயோ அமைப்பின் குழுவினர் யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,நவ.28

இலங்கையில் தவறான முடிவெடுப்பவர்களைத் தடுக்கும் செயற்திட்டங்களை முன்னெடுத்து வரும் 'சிறிலங்கா சுமித்ரயோ' அமைப்பின் தேசிய சபையின் தலைவர் திருமதி குமுதினி டி.சில்வா தலைமையிலான குழுவினர் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இயங்கும் "கை கொடுக்கும் நண்பர்கள்" சிறிலங்கா சுமித்ரயோ யாழ்ப்பாணக் கிளையின் சகல தொண்டர்களையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். இந்தச் சந்திப்பு பருத்தித்துறை வீதி கல்வியங்காட்டில் அமைந்துள்ள சங்கிலியன் மன்றத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் என்று சிறிலங்கா சுமித்ரயோ யாழ்ப்பாணக் கிளை இயக்குநர் எ.மௌலீ தெரிவித்துள்ளார். (க)

# ரோபோ ஆக்கத்திறன் போட்டிக்கு வடக்கில் அதிக மாணவர்கள் தெரிவு

வவுனியா, நவ.28

கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட ரோபோ ஆக்கத்திறன் போட்டிக்கு வடக்கு மாகாணத்திலிருந்தும் அதிகமான மாணவர்கள் தேசியப் போட்டிக்குச் செல்கின்றனர் என்று கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முதல் முறையாக பாடசாலை மாணவர்களுக்கிடையே ஐந்து வெவ்வேறு தலைப்புகளில் ரோபோ ஆக்கத்திறன் போட்டி நடத்தப்பட்டது.

இதில் பங்கு கொண்ட வடக்கு மாகாண பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பலர் தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் ஆக்கத் திறனை ஊக்குவிப்பதன் ஊடாக எதிர்காலத்தில் தொழில்நுட்ப உலகத்தில் மாணவர்கள் வெற்றிகரமாக வாழமுடியும் என்ற நோக்கில் ரோபோ ஆக்கத்திறன் போட்டிகள் நடத்தப்பட்டது.

உற்பத்திக் கைத்தொழில், கல்வி, சுகாதாரம், களியாட்டம், பொறியியல்துறை ஆகியவற்றில் பிரகாசிக்க ரோபோக்களை மாணவர்கள் உருவாக்கவேண்டும். பாடசாலை மட்டத்தில் இருந்து தேசிய மட்டம் வரை இந்தப் போட்டிகள் நடைபெறும் என்று கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டது. அதற்கு அமைவாக போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் வடக்கு மாகாண பாடசாலை மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி சுமார் 15 க்கும் அதிகமான மாணவர்கள் தேசிய மட்ட போட்டிகளுக்கு செல்லவுள்ளனர் என்று திணைக்களம் தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)

# வவு. சுகாதாரப் பணிமனை தொண்டர்களால் முற்றுகை



வவுனியா, நவ. 28

சுகாதாரத் தொண்டர்களின் ஒரு பகுதியினர் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையை நேற்று முன்தினம் முற்றுகையிட்டனர்.

மாகாண சுகாதார அமைச்சினூடாக தமக்கு நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு நேர்முகத்தேர்வுக்குச் சென்ற போதிலும் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றாதவர்களுக்கும், சேவைக்காலம் குறைந்தவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே அவர்கள் முற்றுகையிட்டனர்.

வடக்கு மாகாணத்துக்கு சுகாதாரப் பணி உதவியாளர்கள் 454 பேரை நியமிப்பதற்காக சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற நேர்முகத்தேர்வுகள் அதன் பெறுபேறுகள் அனைத்தும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்துமாறு முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் உத்தரவிட்டிருந்தார். இந்த வெற்றிடத்துக்கு தோற்றிய ஆயிரத்து 923 பேருக்கும் மீண்டும் நேர்முகத் தேர்வு நடத்துமாறும் பணிப்புரை வழங்கியிருந்தார். அதற்கமைய சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் அந்தந்த மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளால் நடத்தப்பட்டு ஒரு பகுதியினருக்கு நியமனங்களும் வழங்கப்பட்டிருந்தன.

நியமனம் கிடைத்தவர்கள் கையொப்பமிடுவதற்காக தமது நியமனக் கடிதத்துடன் நேற்று வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு வருகை தந்திருந்தனர். எனினும் அரச உத்தரவின்படி அவ்வாறு கையொப்பமிடும் செயற்பாட்டை இடை நிறுத்து மாறு தமக்கு கடிதம் வந்துள்ளது. எனவே கையொப்பமிடும் செயற்பாட்டை தற்போது மேற்கொள்ள முடியாது என்று நியமனம் பெற்றவர்களிடம் வவுனியா சுகாதார சேவைகள் பணிமனையின் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் அவர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வாயிலில் குழுமியிருந்தனர். நியமனம் கிடைக்காத சுகாதாரத் தொண்டர்களும் அங்கு வருகை தந்து தமக்கு நியமனம் வழங்கப்படாது புதியவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்து பணிமனையை முற்றுகையிட்டிருந்தனர். இதன் காரணமாக சுகாதார பணிமனைக்கு முன்பாக நியமனம் கிடைத்தவர்களும், நியமனம் கிடைக்காதவர்களும் சிறிது நேரம் கருத்து முரண்பாட்டில் ஈடுபட்டனர். பணிமனைக்கு முன்பாக நீண்ட நேரம் காத்திருந்தனர். சற்றுநேரம் அந்தப் பகுதியில் குழப்பமான நிலை ஏற்பட்டிருந்தது. இந்தவிடயம் தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கேட்டபோது, தமக்கு இது தொடர்பில் எதுவும் கூற முடியாது என்று தெரிவித்தார். (கு-110)

# மூதாட்டி சடலமாக மீட்பு

பதுளை, நவ.28

காணாமல் போயிருந்த மூதாட்டி ஒருவர், தொட்டலாகலைத் தேயிலைத் தோட்டத்தின் தேயிலைச் செடிபுதருக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த அப்புத்தளையைச் சேர்ந்த வேலு அம்ராவதி (வயது 72) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தோட்டத்துக்குள் விறகு எடுக்கச் சென்ற போது. அவர் காணாமல் போயுள்ளார் என்று அப்புத்தளைப் பொலிஸாரிடம் உறவினர்கள் முறையிட்டனர்.

தேடுதல் மேற்கொண்ட பொலிஸார், தொட்டலாகலைத் தேயிலைத் தோட்டத்திலிருந்து நேற்று சடலத்தை மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# தேசிய இனங்களுடைய அமைப்புக்களும் இடதுசாரி அமைப்புக்களும் சேரவேண்டும்

## இலங்கை கொம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

நடந்துமுடிந்த அரசதலைவர் தேர்தல் முடிவுகளுடன் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்கள் மேலும் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளன. அதிலிருந்து மீள்வதற்கு அவற்றின் தேசிய அபிலாசைகளை முன்னிலைப்படுத்திச் செயற்படும் கட்சிகளும், அமைப்புகளும் பொதுஉடன்பாட்டுடன் செயற்பட்டு ஓர் அணியாகத் திரள்வது அவசியம்.

இவ்வாறு அரசதலைவர் தேர்தலின் பின்னர் நாட்டின் அரசியல் நிலவரம் குறித்து இலங்கை கொம்யூனிஸ்ட் ஐக்கிய கேந்திரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கட்சியின் பொதுச்செயலர் சட்டத்தரணி இ.தம்பையா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிறுபான்மை இனங்களும் பரந்தளவில் உழைக்கும் மக்களும் விவசாயிகளும் அவர்களுடைய விடுதலை நோக்கிய பாதையில் மாற்று அரசியல் கொள்கைகள் வேலைத்திட்டங்கள், அமைப்பாக்கங்கள், இயங்குமுறைகள், அணிசேர்க்கைகள் போன்றவற்றில் சரியான முடிவுகளை எடுத்துச் செயற்படுவது அவசியம்.

பின்னடைவுகளிலிருந்து விடுபடலாமென்று நம்பிக்கைகொண்டு தேர்தல்களை மட்டும் மையமாகக் கொண்டு ஓர் அணியிலிருந்து இன்னொரு அணிக்கு மாறுவதும், ஒன்றை நிராகரித்து இன்னொன்றை ஏற்பதும் தீர்வாகாது.

தேசிய இனங்களின் அபிலாசைகளை முன்னிலைப்படுத்திச் செயற்படும் கட்சிகளும் அமைப்புக்களும் பொது வேலைத்திட்டத்துடன் பொது இணக்கப்பாட்டுடன் செயற்படுவதுடன், பரந்துபட்டரீதியில் பொதுவாக அணிசேர்ந்து செயற்படும் நோக்கில் பயணிப்பதும் அவசியம்.

தேசிய இனங்களின் அபிலாசைகளை முன்னிலைப்படுத்திச் செயற்படும் அமைப்புக்களும், இடதுசாரி ஜனநாயக அடிப்படைகளைக் கொண்டு நாடு முழுவதும் செயற்படும் அமைப்புகள் பொதுஉடன்பாட்டுடன் செயற்படுவதும் பரந்துபட்ட ரீதியில் பொது அணியாகச் செயற்படும் நோக்கில் பயணிப்பதும் அவசியம்- என்றுள்ளது. (த)

# மாற்று வலுவுடையோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.28

யாழ். வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் மாற்றுவலுவுடையோர் தினம் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை ஆடியபாதம் வீதி திருநெல்வேலியில் உள்ள சங்கத்தில் நடைபெறும். நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# கட்டாக்காலி நாய்களால் மக்களுக்குத் தொல்லை

வடமராட்சி, நவ.28

பருத்தித்துறைப் பேருந்து நிலையம் உள்ளிட்ட நகரப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பேருந்து நிலையச் சூழலில் வந்து செல்லும் பயணிகளின் பொதிகளை மோப்பமிடும் அந்நாய்கள் அவற்றை அபகரித்துச்செல்லும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. கட்டாக்காலி நாய்களினுடைய தொல்லையால் மக்கள் மட்டுமல்லாது சாரதிகளும் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். வாகனங்களுக்குக் குறுக்காக நாய்கள் ஓடித்திரிவதால் விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புக்கள் உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த சிலமாதங்களுக்கு முன் நகரில் நடமாடிய கட்டாக்காலி நாய்கள் ஒரே நாளில் ஒரேநேரத்தில் எட்டுபேரை துரத்தி துரத்திக் கடித்து குதறிய சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமையால் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் நீடித்துள்ளன என்று மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். இது குறித்த சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (ஐ-173)

# தகரங்கள் கையளிப்பு

மன்னார், நவ.28

மன்னார் பட்டித்தோட்டம் மற்றும் கீரிக் கிராமத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால், பாதிக்கப்பட்ட இரண்டு குடும்பங்களுக்கு தகரங்கள் வழங்கப்பட்டன.

சமூக சேவையாளரான பெருமாள் சிவகுமாரன், ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தலா பத்து தகரங்களை நேற்று முன்தினம் வழங்கினார். இரண்டு முதுமைத் தம்பதிக்கும், மூன்று பெண்பிள்ளைகளைக்கொண்ட குடும்பத்துக்கும் உதவி வழங்கப்பட்டது. (க-213)



யாழ்ப்பாணம் அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையத்தில் பாலன் பிறப்பினைச் சித்திரிக்கும் வகையில் ஒளி விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. நிகழ்வில் பல்வேறு கலைநிகழ்வுகளும், பரிசில்கள் வழங்கலும் இடம்பெற்றன. (ஐ-)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.28
அளவெட்டி பொது நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தும் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அளவெட்டி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மல்லாகம் வலி வடக்கு பிரதேசசபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வலி.வடக்குப் பிரதேசசபை தவிசாளர்ஜோ.சுகிர்தன்ஆகியோர் கலந்து கொள்வர். (க)

### வளவாளர்களுக்கு விண்ணப்பங்கோரல்

வீடமைப்பு நிர்மாணத் துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக, சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தால் குறிப்பிட்ட சில பாடநெறிகளைக் கற்பிப்பதற்கான வளவாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டு திறமை மேம்பாட்டு நிகழ்ச்சிக்கு அமைவாக, பிரதேச செயலர் பிரிவில் உள்ள கலாசார மத்திய நிலையத்தில் கர்நாடக சங்கீதம், பரதம், நாட்கமும் அரங்கியலும், சிங்களம். வயலின், மிருதங்கம் கீபோர்ட் ஆகிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.


இந்தப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வளவாளர்களைத் (ஆசிரியர்கள்) தேர்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விபரங்களை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

# மன். புதுவெளி அ. மு. க. பாடசாலைக்கு நிரந்தர அதிபர், ஆசிரியர்கள் இல்லை

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

மன்னார், நவ.28

**மன்னார் புதுவெளி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை நிரந்தர அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இன்றி இயங்குகின்றது என்று சுட்டிக்காட்டடப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது என்று மாணவர்களின் பெற்றோர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.**




"மன்னார் புதுவெளி முஸ்லிம் கலவன் பாடசாலை தரம் ஒன்பது வரை இயங்குகிறது. இந்தப் பாடசாலையின் அதிபர் கடந்த ஐந்து மாதங்களுக்கு முன் இடமாற்றலாகிச் சென்றுள்ளார் ஆனால் இன்று வரை புதிய அதிபர் எவரும் நியமிக்கப்படவில்லை. மாறாக அதிபர்தரமில்லாத ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் அத்துடன் பதினெட்டு ஆசிரியர்கள் தேவையாக உள்ள இடத்தில் எட்டு ஆசிரியர்களே உள்ளனர் மேலும் கேட்போர் கூடத்தில் தடுப்புச்சுவர்கள் இல்லாமல் வகுப்புகள் இடம் பெற்று வருவதால் ஆசிரியர்களால் பாடம் நடத்த முடியாதுள்ளதுடன் மாணவர்களாலும் கற்றுக் கொள்ள முடியாதுள்ளது. கணிதம் அழகியல் உடற்கல்வி மனையியல் ஆங்கிலம் இஸ்லாம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை. இதனால் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கையில் பாரிய பின்னடைவு நிலவுகிறது. ஏற்கனவே இந்தப் பாடசாலைக்கு என்று நியமித்த ஆசிரியர்கள் சிலர் பாடசாலைக்கு வரமலேயே இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர். மாணவர்களில் அக்கறை கொண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்" என்று பெற்றோர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

"முன்பு இருந்த அதிபர் மன்னார் துள்ளுக்குடியிருப்பு பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். அதற்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கான முயற்சிகள் நடைபெற்று வந்தது. அதற்குள் அரசதலைவர் தேர்தல் இடம்பெற்றது. தேர்தல் திணைக்களத்தின் அறிவித்தலின் படிநவம்பர் 30ஆம் திகதிவரை புது நியமனங்கள் எதுவும் கொடுக்க இயலாது. நவம்பர் 30ஆம் திகதியின் பின் குறித்த பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படுவார். அந்த பாடசாலையில் இடைக்கால அதிபராகவே ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் அத்துடன் விஞ்ஞானம், கணித பாட ஆசிரியர்களை நியமிப்பது கல்வி அமைச்சு. கூடுதலாக ஜனவரியின் பின்னர் அதற்கான ஏற்பாடுகள் நடைபெறும். மன்னார் கல்வி வலயத்தில் 323 ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. தேசிய பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. காலப்போக்கில் தான் இவை நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்" என்று மன்னார் வலயக்கல்வி பணிமனையின் தகவல்கள் தெரிவித்தன. (ஜ-213)

# நாய்க்குட்டி ஒன்றின் தோலால் கிளியில் எழுந்தது சந்தேகம்

கிளிநொச்சி, நவ.28
நாய்க் குட்டி ஒன்றின் தோல்ப் பகுதி மட்டும் தனியே காணப்பட்டது, அந்த நாய்க்குட்டி இறைச்சியாக்கப்பட்டு அதனுடைய தோல்வீசப்பட்டதா என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.



கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக நேற்றுக் காலை காணப்பட்ட நாய்க்குட்டியின் தோலே இவ்வாறானதொரு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் நாய்க்குட்டி இறைச்சியாக்கப்பட்டதற்கான எந்தவித ஆதாரங்களும் கிடைக்கவில்லை என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். விபத்துக்குள்ளான நாய்க்குட்டியை, காகங்கள், மற்றும் ஏனைய விலங்குகள் உண்ட பின்னர், அதன் தோல் மட்டும் இழுத்து வரப்பட்டு போடப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

நாய்க் குட்டியின் தோல் அதை உரித்து இறைச்சியாக்கப்பட்டதை வெளிப்படுத்துகிறது என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் எழாமல் இல்லை. (ஜ-222)

### இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ.28
வட்டுக்கோட்டை அரிமாக் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம், சித்தன்கேணி தெல்லிப்பளை வீதியிலுள்ள கழகச் செயலகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை.8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை இடம்பெறும்.

லயன் க.நந்தகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ள மருத்துவ முகாமில், பொது மருத்துவ சிகிச்சை, நீரிழிவுப் பரிசோதனை, நீரிழிவு பற்றிய விழிப்புணர்வு மற்றும் கண் பரிசோதித்தல், கண்ணாடி வழங்கல் என்பன இடம்பெறும். (க)

### கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம்,நவ.28
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்பட்ட பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களின் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கலும் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப்பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.ஃப்ரொஜ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மைவிருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்வர்.

மனைமுகாமைத்துவம், கணனிப்பயிற்சி, புத்தகம், கட்டுதல், தையல், கைவினைக்கலைகள், தொடர்பான பயிற்சி நெறிகளைப் பயின்ற அனைவரும் அன்றைய தினம் சான்றிதழ்களைப் பெற்றுமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

### தேசிய பாதுகாப்பு சபைக் கூட்டம்

கொழும்பு, நவ. 28
இடைக்கால அரசு கடந்த வாரம் பதவிக்கு வந்த பின்னர், தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் முதல்முறையாக நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

நீண்டநேரம் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலவரங்கள் மற்றும், அமைதியை நிலைநாட்டுவதற்கு எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் முப்படைகளினதும் தளபதிகள் மற்றும் தேசிய பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் போன்றோரும் பங்கேற்றனர். (ஒ.5)

## தமிழ் முஸ்லிம்களை பிரித்தாளும் நிகழ்ச்சி நிரல்

### அதாவுல்லாவின் செயற்பாட்டை கண்டிக்கிறார் வேலுகுமார் எம்.பி.

கொழும்பு, நவ. 28

தமிழ், முஸ்லிம் மக்களை பிரித்தாளும் பேரினவாதிகளின் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றும் ஒப்பந்தக்காரராகவே அதாவுல்லா செயற்பட்டு வருகிறார். இதன் ஓர் அங்கமாகவே மலையகத் தமிழர்களை இழிவுப்படுத்தும் வகையில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார் என்று கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

மலையகத் தமிழர்களை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள அதாவுல்லாவுக்கு கடும் கண்டனம் தெரிவித்து உடனடியாக அவர் மன்னிப்பு கோர வேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் காடாக காட்சியளித்த பகுதிகளை தமது கடின உழைப்பால் வளம்மிக்க பகுதிகளாக மாற்றியவர்கள் மலையகத் தமிழர்களே! அதுமட்டுமல்ல இலங்கையின் பொருளாதாரத்துக்குப் புத்துயிர் கொடுத்ததுடன், நாட்டின் முன்னேற்றத்துக்காக பலவழிகளிலும் உழைத்துள்ளனர்.

எனவே, பெருந்தோட்டத் துறையின் காவல்தெய்வங்களாகக் கருதவேண்டிய எமது மக்களை, மாறுபட்ட கோணத்தில் விமர்சிப்பது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தால் மாத்திரமே இனிவரும் காலப்பகுதியில் உரிமைகளை வெல்லக்கூடியதாக இருக்கும் என்பதுடன், அரசியல் இருப்பையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். நடைபெற்று முடிந்த அரச தலைவர் தேர்தல்முடிவுகள் இதனை மிகவும் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மோதல்களை உருவாக்கி அவர்களின் பேரம் பேசும் சக்தியை சூனியமாக்குவதற்காகப் பேரினவாதிகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களை நிறைவேற்றும் ஒப்பந்தக்காரர்களாக அதாவுல்லா போன்ற மூத்த அரசியல்வாதிகள் செயற்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

அற்பசொற்ப சலுகைகளுக்காக தனது சமூகத்தைக் காட்டிக்கொடுப்பதுடன், ஏனைய சமூகங்களையும் சீண்ட முற்படுவதானது சாக்கடை அரசியலின் உச்சக்கட்டமாகும் என்பதை அதாவுல்லாவுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இலங்கையின் அரசியல் கலாசாரம் இன்னும் மாறவில்லை என்பதையே அதாவுல்லாவை மையப்படுத்திய சம்பவம் எடுத்துக்காட்டுகின்றது. பொது வெளியில் எவ்வாறு கதைக்க வேண்டும், எவ்வாறு செயற்பட வேண்டும் என தெரியாத அதாவுல்லா போன்றவர்கள், தங்களைத்தலைவர்எனக் கூறிக்கொள்வது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்-என்றுள்ளது. (ஓ.5)

# அதாவுல்லாவுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 28

மலையக மக்களை அவமானப்படுத்தும் சொற்பிரயோகத்துடன் வர்ணித்த தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லாவுக்கு எதிராக கொழும்பில் நேற்றுமுன்தினம் காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

புறக்கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தை புதிய ஜனநாயகமக்கள்முன்னணிஏற்பாடுசெய்தது. சில தினங்களுக்கு முன்னர் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற நேர்காணலில் கலந்து கொண்டிருந்த அதாவுல்லா, மலையக மக்களை அவமானப்படுத்தும் வகையிலான சொற்பதத்தை பயன்படுத்திய குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ளார். முன்னாள் அமைச்சர் அதாவுல்லா மீது அந்தச் சந்தர்ப்பத்தில் முன்னாள் அமைச்சர் மனோ கணேசன், குவளையிலிருந்த தண்ணீரை வீசியெறிந்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்திய சம்பவமும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் முன்னாள் அமைச்சர் அதாவுல்லாவைக் கண்டித்தும், அவர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என வலியுறுத்தியும் புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் நடராஜா ரவிக்குமார் தலைமையில்கொழும்பில்ஆர்ப்பாட்டம்நேற்று முன்தினம் நடைபெற்றது. (ஓ.5,22)

## அதாவுல்லா கீழ்த்தர செயற்பாடு சிறிரெலோ அமைப்பு கண்டனம்

வவுனியா, நவ. 28

ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திடமும் அதாவுல்லா மன்னிப்புக் கோர வேண்டும். வடக்குத் தமிழன், கிழக்குத் தமிழன், மலையகத் தமிழன், கொழும்புத் தமிழன், வன்னித் தமிழன் என்று பிரிவினைகளை உருவாக்கி தமது சுய அரசியல் இலாபங்களை அடைய முயற்சிக்கும் கீழ்த்தர அரசியல்வாதிகளே உங்களுக்குக் கடுமையாக எச்சரிக்கை விடுக்கிறோம்.

இவ்வாறு சிறிடெலோ கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உங்கள் வக்கிரக அரசியலுக்காக ஒற்றுமையாக வாழும் தமிழ்ச் சமூகத்தைப் பிளவுபடுத்த நினைக்காதீர்கள்.

பொறுப்புவாய்ந்த ஒரு முன்னால் அமைச்சர் பொதுநிலையில் இவ்வாறான கருத்தை முன்வைத்திருப்பது அவருடைய முட்டாள் தனத்தையும் அவருடைய உள்ளத்தில் தமிழர்கள் பற்றிய மனநிலையையும் தெட்டத் தெளிவாகக் காட்டிகிறது. எனவே தமிழ் மக்களை இவ்வாறு கீழ்த்தரமாக நினைத்திருக்கும் அதாவுல்லா மற்றும் அவர் போன்ற மனநிலையில் உள்ள அனைவரும் உங்கள் மனதில் இருந்து வக்கிர எண்ணங்களை மறந்து விடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கையில் இடம்பெற்றது உரிமைக்கான விடுதலைப்போராட்டமே தவிர பயங்கரவாதமோ, தீவிரவாதமோ இல்லை. அது பயங்கரவாதம் என்றால் ஈஸ்ரர் தினத்தன்று மத ஸ்தலங்களில் குண்டு வெடித்து பல உயிர்களைக் காவு கொண்டது புனித போரா? என்ற கேள்வியையும் எழுப்புகிறோம். (த)

## மலையக மக்களை இழிவுபடுத்திய அதாவுல்லாவுக்கு பிரபா கண்டனம்

கொழும்பு, நவ. 28

முன்னாள் அமைச்சர் அதாவுல்லா, முன்னாள் அமைச்சர் மனோ கணேசனுடன் வாதிடும் போது மலையகத் தமிழ் இனத்தவர்களை அநாகரிக வார்த்தையில் விழித்துப் பேசியதற்காக சமூகம் சார்பான கடுமையான கண்டனத்தை அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் பிரதிஅமைச்சருமான பிரபா கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமை பற்றி வாய் கிழிய பேசிய அதாவுல்லா, இறுதியில் தமிழ் விரோத சக்திதான் என்று நிரூபிக்கும் முகமாக மலையக சமூகத்தினரை இழிவுபடுத்திப் பேசியமை காரணமாக இன்று மலையக மக்கள் கொதித்துப் போயுள்ளனர். நாட்டில் வாழும் முஸ்லிம் மக்கள் கடந்த சில காலமாக தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். முஸ்லிம் தேசியவாதம் என்ற போர்வையில் அவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சாடாமல் தமிழ் மக்களையே குறி வைக்கின்றனர். கடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலிலும் கூட இவர்கள் தமிழ் மக்களையே குறிவைத்திருந்தமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான போக்கு நீடிக்குமேயானால் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக தமிழர்கள் விழித்தெழ வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறும் பொழுது இலங்கைவாழ் வடக்கு, கிழக்கு, மலையக தமிழர்கள் தமது ஒற்றுமை எதிர்ப்புணர்வை இவருக்கு எதிராக வெளிப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இஸ்லாமிய முஸ்லிம் மக்களை மோசமாகவும் அநாகரிகவும் விழிக்கும் பல சொற்பிரயோகங்களை நான் நன்கு அறிவேன். படிப்பறிவில்லாதவர்கள் இவ்வாறான சொற்களை அனைத்துச் சமூகங்கள் சார்பாகவும் பிரயோகித்து வருவது இந்த நாட்டில் இடம் பெற்று வருகின்றது.

ஆனால் முன்னாள் அமைச்சராக இருந்தவரும் முஸ்லிம் மக்களுக்கான கட்சி ஒன்றின் தலைவருமான அதாவுல்லா இவ்வாறான சொற்பிரயோகங்களை உபயோகித்ததன் ஊடாக தான் படிப்பறிவில்லாத காட்டுமிராண்டித்தனமான உள்மனம் கொண்டவராக எமது தமிழ் மக்கள் அவரை நோக்கவேண்டிய நிலையை அவரே ஏற்படுத்தியிருக்கின்றார்.

இவருக்கு எதிராக மலையகம், வடக்கு, கிழக்கு உட்பட அனைத்துத் தமிழர்களும் கிளர்ந்தெழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். நான் அங்கம் வகிக்கும் அரசியல் கூட்டணியில் இவரும் இருப்பதையிட்டு நான் மனம் வருந்துகின்றேன்-என்றுள்ளது. (த)

# அதாவுல்லாவின் பேச்சுக்கு ஈரோஸ் கடும் கண்டனம்

வவுனியா, நவ. 28

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஏ.எல்.எம் அதாவுல்லா, தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில்மலையகத்தமிழர்களைக் கீழ்த்தரமாக விழித்துப் பேசியமைக்கு ஈரோஸ் அமைப்பு வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளது.

இது பற்றி அந்தக் கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது:

அதாவுல்லா அவருடைய செய்கைக்காகப் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும். இல்லையெனில் மன்னிப்புக் கேட்கும் வரை அதாவுல்லாவுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும்.


"மதத்தால் இந்துவானாலும், மாண்பில் முஸ்லிம் என்றாலும், வேதம் பயிலும் கிறிஸ்தவனானாலும், தீரச் சைவன் ஆனாலும், ஈழத்தமிழர் ஈழவரே அவர் எங்கிருந்தாலும் நம்மவரே" என்ற எமது கொள்கைக்கிணங்க எமது மக்களை இழிவுபடுத்துவது எவராக இருந்தாலும், நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். ஒடுக்கப்படும் மக்களிடையேகாழ்ப்புணர்வுகளைவிதைத்து ஐக்கியத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் அதாவுல்லா போன்றவர்களைக் கட்சி, இன, மத பேதமின்றி அனைவரும் கண்டிக்க வேண்டும். தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதாவுல்லாவின் கட்சிப் பங்காளியாகவிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் பொதுமக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களும் அதாவுல்லாவின் கீழ்த்தரமான பேச்சுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (த-110)

# மக்கள் கருத்துக்கணிப்பு நடத்தப்படவேண்டும்

## முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட கருத்து

கொழும்பு, நவ. 28

புதிய அரசு பொதுத்தேர்தலுடன் மக்கள் கருத்துக்கணிப்பையும் நடத்த வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.



அரசமைப்பின் 86 ஆவது சரத்தின் கீழ், இதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிக்கையொன்றின் ஊடாக மிலிந்த மொரகொட சுட்டிக்காட்டியுள்ளார். அரச தலைவரை அடிப்படையாகக் கொண்ட நாடாளுமன்ற முறையா?, வெஸ்ட்மினிஸ்டர் நாடாளுமன்ற முறையா மிகவும் சிறந்தது?, மாகாண சபைகளை நீக்கி உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்தல், விருப்பு வாக்கு முறையை நீக்கி பொதுத் தேர்தலுக்காக விகிதாசாரக் கலப்பு முறையை ஏற்படுத்தல், மத, இன மற்றும் வலய ரீதியான பல்வகைமையுடன் தொடர்புடைய தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான, செனட் சபையொன்றை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற விடயங்கள், மிலிந்த மொரகொடவின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள சில யோசனைகளாகும். (ஒ.5)

# இனவாதத் தீயை அணைக்க பெரும் மழை பெய்யவேண்டும்

## மனோவின் தண்ணீர் போதாது என்று சீண்டுகிறார் அதாவுல்லா

கொழும்பு, நவ. 28



மனோ கணேசன் போன்றவர்கள் கடந்த நான்கரை வருடத்தில் ஏற்படுத்திய இனவாதசூட்டைத்தணிக்க, எஞ்சிய குவளையில் இருக்கும் தண்ணீர் போதுமென நினைக்கிறார்கள். பெரும் மழை பொழிய வேண்டும் இந்த இனவாத தீயை அணைக்க. இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மலையக மக்களை இழிவுபடுத்தும் விதமாக பேசிய முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.அதாவுல்லா, மனோகணேசனின் தண்ணீர் வீச்சுக்கு இலக்காகினார்.

அவருக்கு எதிராக பல்வேறு தரப்பினரும் கண்டங்கள் வெளியிட்டு வரும் நிலையில், தன்னிலை விளக்கமளித்து காணொலியை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது: கடந்த நான்கரை வருடங்கள் சமூகங்களை கூட்டிவிட்டு கூதல் காய்ந்து அதில் அரசியல் லாபம் தேடிய கூட்டம் தோல்வியடைந்துள்ளது. இன்னும் மீதமிருக்கும் சமூகங்களை கூட்டிவிட, எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை பாவிக்க திட்டமிட்டுள்ளனர்.

தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கை, அவர்களின் நிலங்கள் பற்றி நீண்டகாலமாக நான் பேசி வருகிறேன். சிறுபான்மையினங்களின் மற்ற இனங்களுடன் மலையக தமிழர்களை கூட்டிவிடும் செயற்பாட்டை நான் நீண்டகாலமாக கண்டித்து வந்திருக்கிறேன்.

அன்றைய நிகழ்ச்சியில், தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினையை நான் பேசிக் கொண்டிருந்தபோது, அதை தாங்க முடியாதவர்கள், என்னுடைய பேச்சை இடைநிறுத்தி, அதை முடிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு மொழியோட்டத்தை பிடித்துக் கொண்டு அதில் அரசியல் லாபம் தேட முயன்றுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களை நான் நேசமுடன் பார்ப்பவன். தொண்டமானால் வழிநடத்தப்பட்டவர்கள். அந்த மக்களின் வாழ்வு சிறக்க வேண்டுமென நாங்கள் நினைப்பதால்தான், எங்களை முடிந்து விட்டுள்ளனர். காணொலியைப் பார்த்தாலே இது வேண்டுமென்றே முடிந்து விட்டதை தெரிந்து கொள்ளலாம்- என்றார். (ஒ.5)

### சஜித்துக்கு ஆதரவாகச் செயற்பட்ட

# செய்தி வாசிப்பாளரிடம் சி.ஐ.டியினர் விசாரணை

கொழும்பு, நவ. 28



புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாகச் செயற்பட்ட செய்தி வாசிப்பாளர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

'பழிவாங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன. சஜித்துக்கு ஆதரவாக அரச தலைவர் தேர்தலில் 'யூடியுப்பில்' செய்தி வாசித்த சஞ்சய தனுஸ்கவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 8 மணித்தியாலங்கள் விசாரணை செய்துள்ளனர்' என்று மங்கள சமரவீர தனது கீச்சகத்தில் பதிவு செய்துள்ளார்.

'எனது ஊடகப் பிரிவின் தலைவரான ருவான்பேர்டினான்டெஸ் அடுத்த இலக்கா?' எனவும் மங்கள சமரவீர கீச்சகத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். (ஒ.5,22)

### சீரற்ற காலநிலை

# 5 பேர் ஒரு வாரத்தில் உயிரிழப்பு சிவப்பு எச்சரிக்கையும் விடுவிப்பு

கொழும்பு, நவ. 28



நாடு முழுவதும் கடந்த ஒரு வாரமாக நிலவும் சீரற்ற காலநிலையால் ஐவர் உயிரிழந்துள்ளதோடு 573 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 272 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சீரற்ற காலநிலை எதிர்வரும் சில தினங்களுக்கு தொடரும் என்றும் சில பிரதேசங்களில் 150 மில்லி மீற்றரை விட அதிக மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என்றும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதிக மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் எனத் தெரிவித்து 8 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**காலநிலை**

மழையுடனான காலநிலை எதிர்வரும் ஓரிரு தினங்களுக்கு நீடிக்கும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியிருக்கிறது. அத்தோடு 8 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் ஏனைய சில பிரதேசங்களிலும் அதிக மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், பொலன்னறுவை மாவட்டத்திலும் 150 மில்லி மீற்றரை அண்மித்த மழை வீழ்ச்சிப் பதிவாகக் கூடும்.

ஊவா, சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும், அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றர் வரை மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும்.

அத்தோடு மத்திய, வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும், திருகோணமலை மாவட்டத்திலும் மழையுடனான காலநிலை நிலவும் போது காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியிருக்கிறது. எனவே அடை மழை மற்றும் காற்றால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**அதி கூடிய மழைவீழ்ச்சி**

கடந்த 48 மணித்தியாலங்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒட்டுச்சுட்டான் பிரதேசத்தில் 158.2 மில்லி மீற்றர் அதி கூடிய மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

**பாதிப்பு**

கடந்த 18 ஆம் திகதி முதல் நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 7 மாவட்டங்களில் 573 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 272 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு ஐவர் உயிரிழந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மைய நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் காற்று மற்றும் வெள்ளம் என்பவற்றால் ஒரு குடியிருப்பு முழுமையாகவும், 38 வீடுகள் பகுதியளவிலும், ஏனைய கட்டங்கள் மூன்று பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இடர்களால் பாதிக்கப்பட்ட 61 குடும்பங்களைச் சேர்ந்த 203 பேர் தற்காலிக முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ஒ.5)

# வெளிநாட்டு பயண தடைகளை தளர்த்த ஆதரவு

கொழும்பு, நவ. 28

நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளின் கோரிக்கைக்கு அமைய, இரு வேறு குற்ற விசாரணைகள் தொடர்பில் சந்தேக நபர்களுக்கு பிறப்பிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடைகள், அதே விசாரணை அதிகாரிகளின் ஆதரவுடன் நேற்றுத் தளர்த்தப்பட்டன.

கோட்டை நீதிவான் நீதிமன்றில் குறித்த விவகாரங்கள் விசாரணைக்கு வந்தபோது, அந்தப் பயணத் தடைகளை நீக்குவதற்கு தாம் எதிர்ப்பில்லை என்று எப்.சி.ஐ.டி. அதிகாரிகள் மன்றில் தெரிவித்தை அடுத்து நீதிவான் ரங்க திஸாநாயக்க வெளிநாட்டு பயணத் தடைகளை தளர்த்தினார்.

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹம்மட் முசம்மில், அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர ஆகியோரின் வெளிநாட்டுப் பயணத் தடை முழுமையாகவும், மற்றொரு விவகாரத்தில் வெளிநாட்டுப் பயணம் தடைசெய்யப்பட்ட முன்னாள் ஆயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஜகத் பீ விஜேவீர, ஆயத் திணைக்களப் பணிப்பாளர் தாரக செனவிரத்ன ஆகியோரின் வெளிநாட்டுபயணத்தடைகள் தற்காலிகமாகவும் தளர்த்தப்பட்டன. (ஒ.5)

# டெங்கு காய்ச்சலால் 90 பேர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 28

டெங்கு காய்ச்சலால் இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களில் 90 பேர் உயிரிழந்துள்ளதுடன், நாடளாவிய ரீதியில் 72 ஆயிரத்து 305 பேர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்ததாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் மருத்துவ அதிகாரி அருணஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 15 ஆயிரத்து 220 பேர் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு, கம்பகா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாட்டில் அதிகரித்து வரும் மழை காரணமாக டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன.

அரச தலைவர் தேர்தல் காலத்தில் மக்கள் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதில் கவனம் செலுத்தாமையும் டெங்கு காய்ச்சல் அதிகரிப்புக்கு ஒரு காரணமாகும். டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கைகளில் முப்படையினரையும் ஈடுபடுத்துவதற்கான செயற்றிட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

என்றாலும் பொது மக்களும் தமது சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

## தேர்தல் சட்டத்தை மீறிய அரச பணியாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகள்

### தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 28

அரச தலைவர் தேர்தலின் போது தேர்தல் சட்டத்தை மீறியதாக 3 அரச பணியாளர்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் மீதான ஆரம்பகட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதன்பிரகாரம் பொது நிர்வாக அமைச்சின் தலைமீட்டுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறும் வகையில் செயற்பட்ட ஏனைய அரச பணியாளர்கள் இருவர் தொடர்பில் தகவல்கள் திரட்டப்படுகின்றன. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில், அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரச தலைவர் தேர்தல் காலப்பகுதியில் அரச வாகனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை குறித்து 4 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர். இந்த விடயம் குறித்து அரச பணியாளர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் அந்தந்த நீதிவான் நீதி மன்றங்களில் முற்படுத்தப்பட்ட பின்னர், பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறப்படுவதாகவும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர். (ஒ.5)

## செய்தி நிறுவனத்தில் பொலிஸார் தேடுதல்

### ஆட்சிமாற்றத்தின் பின்னரான நிலைமை

கொழும்பு, நவ. 28

மீரிஹானவில் உள்ள நியூஸ்ஹப் என்ற இணையத்தள செய்தி நிறுவன பணியகத்தில் பொலிஸார் நேற்று முன்தினம் காலை தேடுதல் நடத்தியுள்ளனர்.

வெறுக்கத்தக்க பேச்சு தொடர்பான சான்றுப் பொருள்கள் இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்தே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். நுகேகொட நீதிவான் நீதிமன்றத்தில் பெறப்பட்ட தேடுதல் ஆணையின் படி இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் அங்கு வெறுக்கத்தக்க பேச்சு தொடர்பான எந்த சான்றுப் பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் அவர் கூறினார். (ஒ.5)

## பதவிகள் வரபிரசாதம் அல்ல அவை முக்கிய பொறுப்புக்கள்

### இராஜாங்க அமைச்சர்களுக்கு கோத்தபாய ஆலோசனை

கொழும்பு, நவ. 28

தற்போது வழங்கப்பட்டுள்ள பதவிகள் வரபிரசாதம் அல்லவென்றும் அவை மிக முக்கிய பொறுப்புகள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்களை நியமித்த பின்னர் உரையாற்றுகையில் அரச தலைவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் பெரிய எதிர்பார்ப்புகளுடனேயே எமக்கு வாக்களித்துள்ளனர். இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு எமக்கு விருப்பம் இருந்தாலும், எமது கொள்கை அறிக்கை தொடர்பில் பார்க்கும் போது எமக்கு அதிகளவான பொறுப்புகள் உள்ளன. அதன் காரணமாகவே, அதே விதத்தில் பதவிகளை வழங்குவதற்கு தீர்மானித்தோம். தமக்கு கிடைத்த அமைச்சு பதவி தொடர்பில் சந்தேகங்கள் இருக்கலாம். எனினும், பொறுப்புகள் அதிகம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

மக்களின் தேவைகளை பார்த்து இந்த அமைச்சு பதவிகள் பிரிக்கப்பட்டுள்ளன. பதவிகள் கிடைக்காவிட்டாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிறை வேற்றக் கூடிய பொறுப்புகள் உள்ளன. அந்த பொறுப்புகளை நிறைவேற்றி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் - என்றார். (ஒ.5)



## வடக்கு ஆளுநர் நியமனத்துக்கு அத்துரலிய தேரர் பரிந்துரைக்கும் நபர்

யாழ்ப்பாணம், நவ. 28

வடக்கு மாகாண ஆளுநராக இந்து பௌத்த கலாசார பேரவையின் தலைவர் இராமச்சந்திரனை நியமிக்குமாறு அத்துரலிய ரத்தன தேரர் அரச தலைவருக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இராமச்சந்திரன் கடந்த 2009 ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் சமூக சேவையில் ஈடுபட்டுள்ளதுடன், வடக்கு மாகாண இளைஞர்களுக்குச் சிங்கள மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்க வாய்ப்பு வழங்கினார்.

அத்துடன் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஆகியோருடன் இணைந்து சமூக சேவையாற்றியுள்ளார் என்று அவர் பரிந்துரைத்துள்ளார்.

சிறையிலுள்ள அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் துரித நடவடிக்கை எடுப்பதனால் ஆளுனர் பதவியை ஏற்க தயார் என்று இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ)

## அமைச்சரவையின் பேச்சாளர்களாக பந்துல குணவர்தன, ரமேஷ் பதிரண

கொழும்பு, நவ. 28

அமைச்சரவை பேச்சாளர்களாக அமைச்சர்களான பந்துல குணவர்தன மற்றும் ரமேஷ் பதிரண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் அரச தலைவரின் செயகலத்தில் இடம்பெற்றது.

இதையடுத்தே அவர்கள் அமைச்சரவைப் பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ம)

## அதாவுல்லாவின் பேச்சுக்கு ஆனந்தன் எம்.பி. கண்டனம்

வவுனியா, நவ. 28

முன்னாள் அமைச்சர் அதாவுல்லா மலையக மக்களைக் கொச்சைப்படுத்தி பேசியிருப்பது கண்டிக்கத்தக்கது என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் சமகால அரசியல் தொடர்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் அதாவுல்லா, மலையக மக்களை இழிவுபடுத்தும் வகையான சொல்லாடலைப் பயன்படுத்தியிருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. நாட்டின் தேசிய வருமானத்தின் முதுகெலும்பாகத் திகழும் மலையக மக்களை இவ்வாறு இழிவுபடுத்துவதென்பது மலையக மக்களை மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் வேதனையையும் கவலையையும் அடையவைத்துள்ளது.

மலையகத் தமிழ் மக்களைக் கொச்சைப்படுத்தி பேசியதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இவ்வாறு கண்டனங்களைத் தெரிவிப்பதற்கு எந்தவித அருகதையும் கிடையாது. ஏனெனில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கிளிநொச்சியில் வாழும் மலையக மக்களை மிக இழிவான வார்த்தையால் விழித்திருந்தார். இந்த விடயம் சமூக வலைத்தளங்களில் பரவலாக வந்திருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கும் பங்காளிக் கட்சிகளும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் எந்தவித கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை. தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினையை விதைக்கும் வகையிலான அரசியல் செயற்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவிப்பதோடு முன்னாள் அமைச்சர் அதாவுல்லா தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் தெரிவித்தார். (த-110)

# தேசிய இனப்பிரச்சினைகளுக்கு துணிந்து நடவடிக்கை எடுங்கள்

## அரசதலைவரிடம் சிவசக்தி எம்.பி.கோரிக்கை

வவுனியா, நவ. 28

அதிகூடியபெரும்பான்மைமக்களின் ஆணையைப்பெற்றுள்ள புதிய அரசதலைவர் கோத்தபாய ராஜபக்ச, தேசியஇனப்பிரச்சினைத்தீர்வுக்குதற்துணிவுடன்நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.



இதுபற்றிஅவர்அனுப்பியசெய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசியல் வரலாற்றில் தேசிய இனப்பிரச்சினை ஏழு தசாப்தங்கள் கடந்தும் புரையோடிப் போயிருக்கின்றது. விடுதலைக் கான கோரிக்கை அகிம்சை ரீதியாக முன்வைக்கப்பட்டபோது அதனைத் தென்னிலங்கைத் தலைவர்கள் கருத்திற்கொள்ளாமையால் ஆயுதப்போராட்டமாக உருவெடுத்து 2009 வரையில் நீடித்திருந்தது.

போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டு பத்து ஆண்டுகளாகின்றன. எனினும், தேசிய இனப்பிரச்சினைக்கான மூலகாரணத்தை உணர்ந்துதீர்வுகாண்பதற்கு இதயசுத்தியான நடவடிக்கைகள் இதுவரையில்முன்னெடுக்கப்படவில்லை. தற்போது கோத்தபாய ராஜபக்சவுக்கு பெரும்பான்மை மக்கள் ஆணைவழங்கியுள்ளனர். கோத்தபாய ராஜபக்சவுக்கு வடக்குகிழக்கு வாழ் தமிழ் மக்கள் வாக்களிக்காது விட்டமைக்குபலகாரணங்கள்உள்ளனஎன்பதுபகிரங்கமானவிடயம். எனவேதமிழ்மக்களின்ஜனநாயக தீர்ப்புக்கும்மதிப்பளிக்கவேண்டும். ஆகவே தென்னிலங்கைப் பெரும்பான்மை மக்களை ஏற்றுக்கொள்ளச்செய்யும் திராணியுடைய தலைமையைப் பெற்றிருக்கின்ற புதிய அரசதலைவர் சிங்கள.பௌத்த சித்தாந்தத்துக்குக் கட்டுற்று நிற்காது தற்றுணிவுடன் இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வைவழங்கும்செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும்.

அத்துடன் போர் நிறைவுக்கு வந்த கையோடு12ஆயிரத்துக்கும்அதிகமான போராளிகளை மறுவாழ்வுக்கு உட்படுத்தி விடுவித்த நிலையில் தற்போது தண்டனைக் காலத்தையும் தாண்டி சிறைத்தண்டனை அனுபவித்து வரும் 107வரையிலான தமிழ் அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஆயிரம்நாள்கள்கடந்தும்தொடர்ச்சியாகப்போராட்டங்களைமுன்னெடுத்துவருகின்றனர். இந்நிலைமை தொடர்ந்தும்நீடிக்கமுடியாது. அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதையாவது வெளிப்படைத்தன்மையுடன் பொறுப்புக்கூறவேண்டியது அவசியமாகின்றது. இதில் தொடர்ந்தும் தாமதங்களைச்செய்வதுமனிதாபிமானமற்ற நடவடிக்கையாகவே அமையும்.

குறிப்பாக, போருக்குப் பின்னர் நடைபெற்ற மூன்று அரசதலைவர் தேர்தல்களிலும்அதேபோல்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட பின் நான்கு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் வடக்கு-கிழக்கு வாழ்தமிழ்மக்கள்தெளிவானசெய்தியை அரசுக்கும்தமிழ்த்தலைமைகளுக்கும் வழங்கியிருந்தார்கள்.

இருப்பினும் தமிழ்த் தலைவர்கள் எமக்குக்கிடைத்தசந்தர்ப்பங்களை இராஜதந்திரரீதியாகப்பயன்படுத்துவதற்குப் பதிலாக அவற்றை சுயலாப கட்சி அரசியலுக்காவும் சலுகைகளுக்காகவுமே பயன்படுத்தியுள்ளனர். இதன் காரணமாகத் தமிழ் மக்கள் அடுத்தகட்டமாக என்னசெய்வதென்றறியாதுதடுமாறும்ஒருசூழலுக்குள்தள்ளிவிடப்பட்டிருக்கின்றார்கள்.

ஆகவே தமிழ் மக்களின் ஆணையைப் பெற்று அவர்களை நிர்க்கதியாக்கிய தமிழ்த் தலைமைகளுக்குரியபாடத்தைதமிழ்மக்கள் அடுத்து வரும் காலத்தில் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை உண்மையாகப் பிரதிபலிக்கும் மாற்றுத் தலைமையும் விரைவில் உருவெடுக்கும் என்ற நம்பிக்கையும் உள்ளது. என்றுள்ளது. (த-110)

## சிங்கள மக்களால் தமிழர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்

### கருணா அம்மான் தெரிவிப்பு

மட்டக்களப்ப, நவ. 28

சிங்கள மக்களால் தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர் என முன்னாள் பிரதி அமைச்சரும் தமிழர் ஜக்கிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு திக்கோடை பிரதேசத்தில் இடம்பெற்ற, அரச தலைவர் தேர்தலின் வெற்றி, தோல்வி குறித்து ஆய்வு செய்யும் மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறுகூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச வெற்றியடைவார் எனவே வெல்லும்அணியுடன்நாங்கள் பயணிப்போம். அதில் பயணிக்கின்ற போதுதான் நாங்கள் வாதிட்டு எமது உரிமையை கேட்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே வாக்களிக்குமாறு மக்களிடம் கேட்டோம். ஆனால் மக்கள்தெளிவடையவில்லை. இன்று சஜித் பிரேமதாசவை கொண்டு வந்திருந்தால் என்ன நடந்திருக்கும். கிழக்கில் தமிழன் இருந்திருக்க முடியாதுடன் பெரிய பின்னடைவுகளைச் சந்தித்திருக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால் இன்று சிங்கள மக்களால் தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

சிங்கள மக்களின் அதிக வாக்குகளால் ஒரு அரச தலைவர் உருவாகியுள்ளார். இதனை நிரூபித்துக்காட்டிய அரச தலைவர் தேர்தல் இதுதான்.

கடந்த காலத்தில் 6 அரச தலைவர் தேர்தல் நடந்திருக்கின்றது. அரச தலைவர்களை சிறுபான்மை மக்களின் வாக்குகள் நிர்ணயித்தன. ஆனால் இன்றைக்குப் பெரும்பான்மை மக்கள் மட்டும் போதும், வேறு இனம் தேவையில்லை என்ற கட்டத்துக்கு இந்த தேர்தல் நிரூபித்துள்ளது.

அதேவேளை இதுவரை நடந்த நாடாளுமன்றங்களில், அமைச்சர்களில் முஸ்லிம் அமைச்சர் இல்லாத அமைச்சர்கள்,இது தான். இது எமக்கு பெரிய வெற்றி. மகிந்த ராஜபக்ச என்ன கூறினார் ஹக்கீம், ரிசாட் என்று ஒருவரையும் எடுக்க மாட்டேன் என அவர் வாக்குறுதியளித்தார். அதனை அவர் செய்துகாட்டியுள்ளார்.

எனவே நாங்கள் தவறுகளை எவ்வாறு திருத்தப்போகின்றோம். எதிர்காலத்தில் இவ்வாறு பிழையை விட்டுவிட்டு வந்து வேலை வாய்ப்புகளை பெற்றுத் தருமாறும் பாலம் கட்டித் தருமாறும், வீதியைப் போட்டுத் தருமாறும் கேட்க வேண்டுமென்றால், நாங்கள் அவர்களுக்கு வாக்களித்தால்தான் உரிமையோடு கேட்கலாம். எனவே எதிர் வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் சிறந்த முடிவுளை எடுக்கவேண்டும். தேர்தல் காலங்களில் மேடைகளில் சிலரை தேசிய தலைவர் என்று விழிக்கின்றனர். ஆனால் எவருக்கும் அந்த தகுதியில்லை. எனக்கு கூட தகுதியில்லை. நான் கூட தேசிய தலைவர் பிரபாகரனால் வளர்க்கப்பட்டவன். அந்தத் தகுதி தலைவர் பிரபாகரனுக்கு மட்டும் தான் உள்ளது - என்றார். (ஒ.5)

## அமைச்சர்களின் ஆலோசகர்களுக்கு கட்டுப்பாடு!

கொழும்பு, நவ. 28

அமைச்சர்கள் வைத்திருக்கவுடியஆலோசகர்களின் எண்ணிக்கையைமட்டுப்படுத்த அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தீர்மானித்துள்ளார். அதற்கமைய அமைச்சர் ஒருவர், ஒரு ஆலோசகரை மாத்திரமே வைத்துக் கொள்ள முடியும். அரச செலவைக் குறைப்பதே இதன் எதிர்பார்ப்பாகும்.

இதற்கு முன்னர் அமைச்சரவை அமைச்சர் ஒருவர் வைத்திருக்கவுடியஆலோசர்கள் தொடர்பில் கட்டுப்பாடு காணப்படவில்லை. கடந்த அரசின் போது சில அமைச்சர்களுக்கு 50இற்கும் அதிகமான ஆலோசகர்கள்இருந்தனர். அமைச்சர்களின் ஆலோசர்களுக்காகஅரசுக்குதேவையற்ற செலவுஏற்படுவதாகசுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ.5)

## அடுத்ததவணைஆரம்பத்தில் மாணவருக்கான சீருடைகள்

### புதிய கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 28

"அடுத்த ஆண்டின் முதலாவது பாடசாலை தவணை ஆரம்பத்தின் போது அனைத்துமாணவர்களுக்கும்சீருடை வழங்க நடவடிக்கை எடுப்பேன்". இவ்வாறு கல்வி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.



இதுதொடர்பில்கல்விஅமைச்சுநேற்று முன்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2019ஆம் ஆண்டு பாடசாலை தவணைக் காலம் இன்னும் இரண்டு நாள்களில்நிறைவடையவுள்ளது. எனினும் 2020 ஆம் ஆண்டுக்காக மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்கு கடந்த காலங்களில் நடவடிக்கை எடுக்காமை கவலைக்குரியவிடயமாகும். இதற்கான முழுமையான பொறுப்பைக் கல்வி அமைச்சு ஏற்க வேண்டும்.

முன்னைய ஆட்சியின் போது பாடசாலை மாணவர்களுக்குச் சீருடைக்கு பதிலாக வவுச்சர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமையின் காரணமாக அரசின் செலவு அதிகரித்துள்ளதாக அரச தலைவர் விசாரணை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை கருத்திற்கொண்டு அடுத்த வருடங்களில் சீருடை துணி வழங்குவதா அல்லது வவுச்சர் வழங்குவதாஎன்பதுதொடர்பில்இன்னும்தீர்மானம்எடுக்கப்படவில்லை. இதன்காரணமாக கடந்த ஆண்டின் விலை பெறுமதிக்குஏற்ப2020ஆண்டுக்காகசீருடை வவுச்சர் வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் அமைச்சரவைக்கு முன் வைக்கப்பட்ட போதும் அதற்காக அனுமதீ வழங்கப்பட்டிருக்கவில்லை. (ஒ.5)

## அமைச்சுப் பொறுப்புகள் அரசிதழில் வெளியீடு

கொழும்பு, நவ. 28

அமைச்சரவைக்கு நியமிக்கப்பட்டுள்ள அமைச்சுக்களுக்கான விவரம் மற்றும் அந்த அமைச்சுக்களுக்குக் கீழ் வரும் நிறுவனங்கள் தொடர்பிலான அரசிதழ் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பான அறிவிப்பு, அரச தலைவரின் கையொப்பத்துடன் அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அச்சிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவையில் தலைமை அமைச்சர் உட்பட 16 பேர் அங்கம் வகிக்கின்றனர். நாட்டிலுள்ள சகல அரச நிறுவனங்களும் இந்த 16 அமைச்சுக்களின் பொறுப்பிலும் அரச தலைவரின் கீழ் வரும் விதத்திலும் பிரித்து வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



அம்பாறை



சம்பூர், ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம்






இரட்டைவாய்க்கால்


யாழ்ப்பாணம் - கொடிகாமம்



மட்டக்களப்பு - கல்லடி













ஈச்சங்குளம்- வவுனியா

யாழ்ப்பாணம் - சாட்டி



கனகபுரம் - கிளிநொச்சி



யாழ்ப்பாணம் - கோப்பாய்



மன்னார் - ஆட்காட்டிவெளி




முழங்காவில் - கிளிநொச்சி



மன்னார் - பண்டிவிரிச்சான்




இரணைப்பாலை - முல்லைத்தீவு

யாழ்ப்பாண பல்கலைக் கழகம்








கிழக்குப் பல்கலைக் கழகம்






முல்லைத்தீவு கடற்கரை

தீருவில் வல்வெட்டித்துறை







வன்னிவிளாங்குளம் -முல்லைத்தீவு










வவுனியா நகர சபை

எள்ளாங்குளம் - பருத்தித்துறை முனை







உதயன் பணிமனையில், 12ஆவது தடவையாகவும் குருதிக் கொடை நிகழ்வு நடைபெற்றது. யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இ.ஆனோல்ட் உள்ளிட்ட 50 பேர் குருதிக் கொடை வழங்கினர்.

## எழுச்சியுடன்...

மாவீரர் துயிலும் இல்லங்களிலும், நினைவேந்தல்கள் நடைபெற்ற இடங்களிலும் அலையெனத் திரண்ட மக்கள் நெஞ்சுருகி கண்ணீர் விட்டுக் கதறி அழுது தங்கள் காவல் தெய்வங்களை அஞ்சலித்தனர்.

மாவீரர் துயிலும் இல்லங்களில் ஆயிரக் கணக்கில் திரண்ட தமிழ் மக்கள் தங்கள் பிள்ளைகளின் உற்றாரின் கல்லறைகள் முன்பாக ஈகச்சுடரேற்றினர்.

தாயகத்தில் உள்ள அனைத்துத் துயிலும் இல்லங்களிலும் நேற்று மாலை சம நேரத்தில் சுடர்கள் கொழுந்து விட்டு எரிந்தன. அந்த ஒளி வெள்ளத்தின் மத்தியில் மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுது தமது உறவுகளை நினைவு கூர்ந்தனர். மாவீரர் வீரமறவர் தாயக மீட்பர்களின் கல்லறை முன்பாக அவர்களது பெற்றோர்கள் உற்றார் உறவினர்கள் கதறி அழுதது அங்கு நின்றோர் எல்லோரையும் கண்ணீரில் மூழ்கடித்தது.

தமிழீழ இலட்சியத்தை தமது மூச்சாக வரிந்து கட்டிக் கொண்டு, களமாடி வீரச் சாவை அணைத்துக் கொண்ட மாவீரர்களை நினைவுகூரும் வாரத்தின் இறுதி நாளான நேற்று தாயக மண்ணில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நினைவேந்தல்கள் நடைபெற்றன. துயிலும் இல்லங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன. மாவீரர் எழுச்சிக் கீதங்கள் காலையிலிருந்து ஒலிக்கவிடப்பட்டிருந்தன.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகில் சிறப்பு இடத்திலும், உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்திலும், எள்ளன் குளத்தில் சிறப்பு இடத்திலும், நல்லூரில் தியாகி திலீபனின் நினைவுத் தூபி அருகிலும், பண்டிவிருச்சான் மாவீரர் துயிலும் இல்லத்திலும், ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்திலும், முள்ளியவளை, ஆலங்குளம், வன்னிவிளாங்குளம், தேராவில், தேவிபுரம், இரணைப்பாலை, முள்ளிவய்க்கால், அளம்பில், கோடலிக்கல் ஆகிய மாவீரர் துயிலுமில்ல ங்களிலும், முல்லைத்தீவு கடற்கரையிலும், கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம், வவுனியா நகர சபை மண்டபம் ஆகிய வற்றிலும், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம், கிழக்குப் பல்கலை கழகம் என் பற்றிலும் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்பட்டன. இவற்றைத் தவிர தமிழர் தாயகத்தின் பல இடங்களிலும் மாவீரர் நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று மாலை பரவலாக மழை பெய்த போதும், அதைப் பொருட்படுத்தாது மாலை 5 மணிக்கே துயிலும் இல்லங்களில் திரண்ட உறவுகள், கல்லறைகளுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். கல்லறைகள் மண் அணைகள் முன்பாக அமர்ந்திருந்து கண்ணீர் விட்டுக் கதறியழுதார்கள். ஈகச் சுடரேற்றும் நேரத்திலும் அதன் பின்னர், ஒலிக்க விடப்பட்ட சுபிமீம விடுதலைப் புலிகளின் மாவீரர் தினப் பாடலின் போதும், மாவீரர்களின் உறவுகளின் அழுகை - உணர்வுகள் வீச்சம் பெற்றன.

கடந்த 4 வருடங்களைப் போலல்லாமல் வடக்கு கிழக்கில் இந்தமுறை மாவீரர் நாள் நிகழ்வுகளுக்குப் பொலிஸார், இராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்தியபோதிலும் அந்தத் தடைகளை மக்கள் தகர்த்தெறிந்துவிட்டு துணிவுடன் துயிலும் இல்லங்களுக்குச் சென்று வீரமறவர்களுக்குச் சுடரேற்றினர். (எ6,22,7,105,110, 109,222,26,40,ரி4,56,61,ரி3,173)

## ஈகச்...

முன்பாக அவர்களது உறவுகள் சுடரேற்றி அஞ்சலித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் நினைவு கூரப்பட்ட மாவீரர் தினங்களின் போது, சுடரேற்றலில் ஒலிக்க விடப்படும் பாடல் ஒலிக்க விடப்பட்டது. பாடல் அங்கு கூடியிருந்தோர் கண்களில் கண்ணீர் கசிய வைத்தது. (எ5)

## இன்று..

அதன்பின்னர் இந்தியப் பிரமுகர்கள் பலரைச் சந்திக்கவுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச இலங்கையின் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். அரச தலைவரின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க, திறைசேரி செயலாளர் சஜித் ஆட்டிகல, ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் அரச தலைவரின் தனிப்பட்ட செயலாளர் சுகீஸ்வர பண்டார ஆகியோரும் ஜனாதிபதியின் இந்தப் பயணத்தில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று அவரது ஊடகப் பிரிவு நேற்றிரவு அறிவித்துள்ளது. (எ-22)

## ராஜாங்க...

இவர்கள் பதவியேற்றனர்.

சமல் ராஜபக்ச பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், வாசுதேவ நாணயக்கார நீர் வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர், காமினி லொகுகே நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், மகிந்த யாப்பா அபேவர்தன நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், எஸ்.பி.திசாநாயக்க காணி மற்றும் காணி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், ஜோன் செனவிரத்ன பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், மகிந்த சமரசிங்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர், சி.பீ.ரத்நாயக்க தொடருந்து சேவைகள் இராஜாங்க அமைச்சர், லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப இராஜாங்க அமைச்சர், சுசந்த புஞ்சிநிலமே சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், அநுர பிரியதர்ஷன யாப்பா உள்ளக வர்த்தக மற்றும் பாவனையாளர் நலனோம்பு இராஜாங்க அமைச்சர், சுசில் பிரேமஜயந்த பன்னாட்டு ஒத்துழைப்புகள் இராஜாங்க அமைச்சர், பிரியங்கர ஜயரத்ன சுதேச மருத்துவ சேவைகள் இராஜாங்க அமைச்சர், ரஞ்சித் சியம்பலாபிட்டிய கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர், மகிந்தானந்த அளுத்கமகே மின்சக்தி இராஜாங்க அமைச்சர், துமிந்த திசாநாயக்க இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர், ரோஹித்த அபேகுணவர்த்தன வலுச்சக்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கைத்தொழில் இராஜாங்க அமைச்சர், லசந்த அழகியவண்ண அரச முகாமைத்துவ மற்றும் கணக்கீட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், கெஹெலிய ரம்புக்வெல்ல முதலீட்டு மேம்பாட்டுகள் இராஜாங்க அமைச்சர், அருந்திக பெர்னாண்டோ சுற்றுலா மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், திலங்க சுமதிபால தொழிநுட்ப மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர், மொஹான் பிரியதர்ஷன டி சில்வா மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர், விஜித்த பேருகொட மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர், ரொஷான் ரணசிங்க மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், ஜானக வக்கும்புர ஏற்றுமதி விவசாய இராஜாங்க அமைச்சர், விதுர விக்கிரமநாயக்க விவசாய இராஜாங்க அமைச்சர், ஷெஹான் சேமசிங்க அபிவிருத்தி வங்கிகள் மற்றும் கடன் திட்டங்கள் இராஜாங்க அமைச்சர், கனக ஹேரத் துறைமுக அபிவிருத்தி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர், திலும் அமுனுகம போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர், லொஹான் ரத்வத்தே நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், விமலவீர திசாநாயக்க வன உயிரிகள் வள இராஜாங்க அமைச்சர், ஜயந்த சமரவீர சுற்றாடல் இராஜாங்க அமைச்சர், சனத் நிஷாந்த பெரேரா கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர், தாரக பாலசூரிய சமூகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்.

**பிரதி அமைச்சர்கள்**

நிமல் லன்சா சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர், காஞ்சன விஜேசேகர கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பிரதி அமைச்சர், இந்திக்க அநுருத்த பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர். (ஒ.5)

## வடக்கில்...

னைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது நாட்டில் கடந்த ஆண்டு 3 ஆயிரத்து 500 பேருக்கு எயிட்ஸ் இருக்கின்றது என்று அவதானிக்கப்பட்டது. இவர்களில் 2 ஆயிரத்து 709 நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். எயிட்ஸ் நோயைக் குருதிப் பரிசோதனை மூலமே கண்டறியலாம். இந்த நோய் நிலைமை காணப்படும் என்று சந்தேகம் உள்ளவர்கள் தாமாக முன் வந்து குருதிப் பரிசோதனை செய்ய வேண்டும். நோய் நிலை உள்ளவர்கள் சிகிச்சைக்கு வராமையால், நாட்டில் இந்த நோயைக் கட்டு பாட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை. இலங்கையில் ஓரின சேர்க்கை, விபச்சாரம், சுற்றுலா வழிகாட்டிகள், ஆண் பெண் உருமாற்றம் போன்றவற்றால் எய்ட்ஸ் நோய் அதிகம் பரவுகின்றது.

ஆண் பெண்ணாக மாறுதல், பெண் ஆணாக மாறும் செயற்பாட்டை மேற்கொள்வோர் வடக்கிலும் அதிகம் உள்ளனர். இந்தச் செயற்பாட்டின் மூலமும் நோய் பரவுகிறது. 255 ஆண் ஓரின சேர்க்கையாளர்கள் கடந்த வருடம் எய்ட்ஸ் நோயாளர்களாக நாட்டில் இனம் காணப் பட்டுள்ளனர். எமது நாட்டில் கர்ப்பிணி தாயிலிருந்து பிறக்கும் குழந்தைக்கு எய்ட்ஸ் பரவும் முறை முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை வடக்கில் 45 எய்ட்ஸ் நோயாளர்கள் கண்டறியப் பட்டுள்ளனர். இவர்களில் 30 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த வருடம் 7 எயிட்ஸ் நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் இறந்துள்ளனர். கடந்த வருடத்தை விட இந்த வருடத்தில் எய்ட்ஸ் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அடுத்த வருடம் 90 வீதமான எயிட்ஸ் நோயாளர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு முழுமையான சிகிச்சை வழங்குவதற்கு எண்ணியுள்ளோம் என்றனர். (க7)

## யாழ்ப்பாணம்...

தினமும், நேற்றும் நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடை விதித்திருந்த நிர்வாகம், மாணவர்கள் நேற்றும், இன்றும் பல்கலைக் கழக வளாகத்துக்குள் உள்நுழையக் கூடாது என்றும் பின்னர் அறிவித்திருந்தது.

அந்தத் தடை நடைமுறையில் இருந்த போதும் மாணவர்கள் நேற்றுக் காலை பல்கலைக் கழக வளாகத்துக்குள் நுழைந்து நினைவேந்தல்களை முன்னெடுத்தனர்.

மாணவர்கள் காலையில் நினைவேந்தலை முன்னெடுத்திருந்த நிலையில், நேற்றுப் பிற்பகல் 2 மணியுடன் பல்கலைக் கழகம் மூடப்படுகின்றது என்றும், பல்கலைக் கழக கல்விசாரா உத்தியோகத்தர்கள் வெளியேற வேண்டும் என்ற அறிவுறுத்தல் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக தகுதிவாய்ந்த அதிகாரி க.கந்தசாமியால் சுற்றறிக்கை மூலம் விடுக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும், நேற்று மாலை 6.05 மணிக்கு பல்கலைக் கழகத்தில் கூடிய பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் ஈகச் சுடரேற்றி நினைவுத் தூபியில் உணர்வுபூர்வமாக நினைவேந்தலை அமைதியான முறையில் கடைப்பிடித்தனர். (எ-த-ரி1.26.35)

# அமெரிக்காவை எச்சரிக்கிறது ஈரான்!

தெஹ்ரான்,நவ.28
எங்கள் நாட்டின் எல்லையை மீறினால் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் அழிக்கப்படுவார்கள் என்று ஈரான் மிரட்டல் விடுத் துள்ளது.

ஈரான் புரட்சிப் படையின் தளபதி அமெரிக்காவுக்கு இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

இதுகுறித்து ஈரான் புரட்சிப் படையின் தளபதியான ஹுசைன் மேலும் தெரிவித்ததாவது:


அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல், சவூதி அரேபியா ஆகியவை எங்கள் பிராந்தியத்தில் அமைதியின்மையைத் தூண்டுகின்றன. இதன் காரணமாக ஈரான் பாதுகாப்புப் படையினர் கொல்லப்படுகின்றனர். அமெரிக்கா மற்றும் சவூதியின் விரோத நடவடிக்கைகளுக்கு ஈரான் பொறுமையைக் கடைப்பிடிக்கிறது. ஆனால் அவர்கள் எல்லை மீற நினைத்தால் நிச்சயம் அழிக்கப்படுவார்கள் என்றார்.

**ஈரான் - அமெரிக்கா மோதல்**

அமெரிக்கா உள்ளிட்ட 6 நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே 2015ஆம் ஆண்டில் அணுசக்தி ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. இதன்படி ஆக்கபூர்வ தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளதாகக் கூறி அதிலிருந்து விலகினார். மேலும் ஈரான் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தார்.

இதற்குப் பதிலடியாக ஈரான் அணுசக்தி ஒப்பந்த விதிகளை அடுத்தடுத்து மீறி வருகிறது. இதனால் அமெரிக்கா- ஈரான் இடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது.



இசையைச் செவிமடுக்கின்ற பசுக்கள் அதிக ஆரோக்கியத்துடன் இருப்பதுடன் அவை அதிகமான பாலையும் கறக்கின்றன என ஓர் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் ரஷ்யாவில் உள்ள ஒரு பாற்பண்ணையில் கறவை மாடுகளின் தலையில் இசைக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

# ஈரான் போராட்டங்களில் 731 வங்கிகள் எரிப்பு



ஈரானில் நடந்த போராட்டங்களில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களில் 731 வங்கிகளும், 140 அரச அலுவலங்களும் எரிக்கப்பட்டதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.

இதுகுறித்து ஈரான் உள்துறை அமைச்சகத்தின் தலைவர் அப்துல் ரேசா ரஹ்மானி கூறும்போது, 'ஈரானில் எரிவாயுப் பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து நடத்தப்பட்ட போராட்டங்களில் சுமார் 731 வங்கிகளும், 140 அரசு அலுவலங்களும் எரிக்கப்பட்டன. 70 பெட்ரோல் நிலையங்களும் தாக்குதலுக்கு உள்ளாகின- என்றார்.

**பின்னணி**

அமெரிக்காவின் தொடர் தடைகளால் ஈரானில் பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருள்களின் விலை 50 சதவீதம் கடந்த வாரம் உயர்த்தப்பட்டது. இந்த விலை உயர்வை எதிர்த்துப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

போராட்டக்காரர்களுக்கு எதிராக ஈரான் பாதுகாப்புப் படைகள் நடத்திய தாக்குதலில் 100க்கும் அதிக மானவர்கள் இறந்திருக்கலாம் என்று பன்னாட்டு மன்னிப்புச் சபை தெரிவித்திருந்தது.

தன்மீதான இந்தக் குற்றச்சாட்டை ஈரான் அரசு மறுத்துவரும் நிலையில் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

## இன்றைய நாள்

**மேடம்:** சிலர் தேவையற்ற ஆலோசனை சொல்வர். சுயமான செயல் பலனை பெற்று தரும். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய இனங்களில் பண செலவு ஏற்படலாம். தியானம், தெய்வ வழிபாடு மனம் அமைதி பெற உதவும்.

**இடபம்:** தாமதமான பணியை உத்வேகமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாகும். பண பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டாகும்.

**மிதுனம்:** செயல்களை திட்டமிட்டு துவங்குவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி மேற்கொள்வீர்கள். நிலுவை பணம் வசூலாகும்.

**கடகம்:** குடும்ப உறுப்பினர் இயன்ற அளவில் உதவுவர். தொழிலில் உருவாகிற இடையூறை உடனடியாக சரி செய்வது நல்லது. குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** உங்களின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாகலாம். உண்மை, நேர்மை, குணம் தவறாமல் பின்பற்றுவது பலன் தரும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.

**கன்னி:** பணிகள் நிறைவேற முன்னேற்பாடு செய்வீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும். சுபசெலவு செய்து மகிழ்வீர்கள்.

**துலாம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வாய்ப்பு வரும். தொழிலில் புதிய நுட்பங்களை பயன்படுத்துவது அவசியம். பணவரவைவிட குடும்பத்திற்கான செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிரியினால் உருவான சிரமம் செயலிழந்து போகும். பணியை திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**தனுசு:** குணம் கெட்ட ஒருவருக்கு உதவி செய்து பின்னர் மனம் வருந்துவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர கூடுதல் பணி புரிவது அவசியம். பண செலவில் சிக்கனம் வேண்டும்.

**மகரம்:** உறவினருக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். ஆதாய பண வரவு கிடைக்கும். புத்திரரின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** அற பணியில் ஈடுபடுவீர்கள். உங்கள் மீதான மதிப்பு அதிகரிக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கு பூர்த்தியாகும். உபரி பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** திறமையுடன் செயல்படுவதால் மட்டுமே திட்டமிட்ட பணி நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். குறைந்த அளவில் பண வரவு கிடைக்கும்.

# போராட்டம் நடக்கும் சூழலில் ஈராக்கில் குண்டுவெடிப்புகள்



## காசா மீது இஸ்ரேல் தாக்குதல்

ஜெருசலோம்,நவ.28
இஸ்ரேல் பாலஸ்தீனத்துக்கு இடைப்பட்ட பிரதேசமான காசாவில் உள்ள ஹமாஸ் ஆயுததாரிகளின் நிலைகள் மீது இஸ்ரேல் படைகள் வான்வழித் தாக்குதல் நடத்தின. காசாவிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலுக்குப் பதிலடியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று இஸ்ரேல் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் ஹமாஸ் ஆயுததாரிகளின் இரண்டு தளங்கள் தாக்கப்பட்டதாகவும், இந்தத் தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல் அறியப்படவில்லை என்றும் காசா அதிகாரிகள் தெரிவித்தனர்.


**பின்னணி**

காசா பகுதியில் இரண்டு வாரங்களுக்கு முன்பு இரண்டு நாள்களாக இஸ்லாமிக் ஜிகாத் ஆயுத அமைப்புக்கும் இஸ்ரேல் இராணுவத்தினருக்கும் இடையே போர் நடந்தது. பாலஸ்தீன ஆயுதக் குழுவின் தளபதியான பஹா அபு அல் அட்டா கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதலில் 34 பாலஸ்தீனர்கள் சாவடைந்தனர். இதனைத் தொடர்ந்து அங்கு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் காசா பகுதியில் மீண்டும் தாக்குதலை நடத்தியுள்ளது இஸ்ரேல்.

## அல்பேனியாவில் சாவுகள் அதிகரிப்பு

திரானா,நவ.28
அல்பேனியாவில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கிச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்தது. அல்பேனியாவின் தலைநகர் திரானாவிலுள்ள ஷிஜக் நகரில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆகப் பதிவாகியது. இதன் காரணமாக 140 பேர் காயமடைந்த நிலையில் 3பேர் சாவடைந்திருந்தனர். பலர் காணாமல் போயிருந்தனர். பிந்திய செய்திகளின்படி 9 பேர் சாவடைந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

பக்தாத்,நவ.28
ஈராக்கில் இரண்டு இடங்களில் குண்டுத் தாக்குதல்கள் நடந்தன. இந்தக் குண்டுவெடிப்புக்களில் 6 பேர் சாவடைந்தனர். இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:
ஈராக்கில் ஷாப் மாவட்டத்தின் வடக்குப் பகுதி மற்றும் பாயா மாவட்டம் ஆகிய இடங்களில் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தக் குண்டுத் தாக்குதல்களால் பலர் காயமடைந்தனர். இந்தக் குண்டுவெடிப்புகளுக்கு இதுவரை எந்த ஆயுத அமைப்பும் உரிமைகோரவில்லை. எனினும் இந்தத் தாக்குதலை ஐ.எஸ். ஆயததாரிகள் நடத்தி இருக்கலாம் என்று ஈராக் அதிகாரிகள் தெரிவித்தனர். அத்தோடு ந்தக் குண்வெடிப்புக்கு ஈராக்கில் கடந்த ஒரு மாதமாக நடந்து வரும் போராட்டத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று ஈராக் பாதுகாப்புப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கென்யாவில் கடும் மழை - 65பேர் சாவு



நைரோபி,நவ.28
கென்யாவில் பெய்து வருகின்ற கடும் மழை காரணமாக அங்கு வெள்ளப் பெருக்கு, மண்சரிவு போன்ற இயற்கை இடர்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். கென்யாவின் வடமேல் பகுதியில் ஏற்பட்ட இந்த இடர்களில் சிக்கி இதுவரை 65 பேர் சாவடைந்துள்ளனர். இந்த இடர்கால் காயமடைந்தவர்களின் தொகையைச் சரியாகக் கணிக்க முடியவில்லை என அங்குள்ள இடர் முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அங்குள்ள பாலங்கள், வீதிகள் என்பன வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்ட சில இடங்களுக்குச் செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன இதனால் நிவாரண உதவிகள் தடைப்பட்டுள்ளன. அங்கு நீடிக்கின்ற மிக மோசமான வானிலை காரணமாக உலங்கு வானூர்திகளில் கூட சில இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாக கென்யாவின் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.



காட்டுத் தீ பரவிய நிலையில் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் பெரியதொரு சுழல் காற்று ஏற்பட்டது. எரிந்த சாம்பல் துணிக்கைகள் மற்றும் தீயைத் தன்னுடன் நகர்த்துகிறது குறித்த புயல்.

## ஹிந்தியில் பேசுமாறு வற்புறுத்தியவருக்கு பதிலடி

ஆடுகளம் உட்பட்ட தமிழ்ப் படங்களில் நடித்த நடிகையான டாப்சியைக் ஹிந்தி மொழியில் பேசுமாறு வலியுறுத்திய நபருக்கு டாப்சி வழங்கிய பதில் அதிக பேசுபொருளானது. இந்தியாவின் கோவாவில் நடைபெற்று வரும் பன்னாட்டுத் திரைப்பட விழாவின் அமர்வு ஒன்றில் நடிகை டாப்சி கலந்து கொண்டு பலரது கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதிலளித்துக் கொண்டிருந்தார். அப்போது, குறுக்கிட்ட நபரொருவர், டாப்சியிடம் ஹிந்தி மொழியில் பேசும்படி வலியுறுத்தினார். உடனே, பார்வையாளர்களை நோக்கிய டாப்சி, 'இங்கு இருப்பவர்கள் அனைவருக்கும் ஹஜந்தி தெரியுமா?' என்று கேட்டார். அதற்குப் பெரும்பாலானோர் இல்லை என்று பதிலளித்தனர். இருப்பினும், அந்த நபர் தொடர்ந்து, 'நீங்கள் ஒரு பொலிவூட் நடிகை. எனவே ஹிந்தி யில்தான் பேச வேண்டும்' என்று தெரிவித்தார். 'நான் தமிழ், தெலுங்கு திரைத்துறை யிலும் நடித்து வருகிறேன். எனவே, நான் உங்களிடம் தமிழில் உரையாடலாமா?' என்று டாப்சி கேட்டார். அங்கு கூடியிருந்த பார்வையாளர்கள் ஆர்ப்பரித்தனர். கேள்வி எழுப்பிய அந்த நபர் அமைதியாக உட்கார்ந்துவிட்டார். இந்த விடயம் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் அதிகளவில் சிலாகிக்கப்படுகிறது.

## 2ஆவது டெஸ்ட்டிலிருந்து போல்ட், கிராண்ட்ஹோம் காயம் காரணமாக விலகல்

ஹாமில்டனில் நாளை ஆரம்பமாகும் இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து டிரென்ட் போல்ட், கிராண்ட்ஹோம் விலகியுள்ளனர்.

நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின்போது நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டிரென்ட் போல்ட்டுக்கு காயம் ஏற்பட்டது. விலா எலும்பில் ஏற்பட்ட காயத்தால் போல்ட் 2ஆவது டெஸ்டில் பங்கேற்கமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் வேகப்பந்து வீச்சு, சகலதுறை ஆட்டக்காரர் கொலின் கிராண்ட்ஹோமுக்கு வயிற்றுப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால் இவரும் 2ஆவது டெஸ்டில் இருந்து விலகியுள்ளார்.

ஆகையால், இவருக்குப் பதிலாக சகலதுறை ஆட்டக்காரர் டேரில் மிட்செல் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். மேலும், பெர்குசன், டாட் ஆஸ்லே ஆகியோரும் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.





### ரி-10 போட்டியில்

# மகுடம் சூடியது மராத்தா அணி

அபுதாபியில் நடைபெற்ற ரி-10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் லீக் போட்டியில் மராத்தா அணி கிண்ணம் வென்றது.

ரி-10 லீக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அபுதாபியில் இடம்பெற்றது. இதில் கிறிஸ் லின் தலைமையிலான மராத்தா அரேபியன்ஸ் – ஷேன் வொட்சன் தலைமையிலான டெக்கான் கிளேடியேட்டர்ஸ் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற மராத்தா அணியினர் டெக்கான் அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தனர். அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த மராத்தா அணி 7.2 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக மராத்தா அரேபியன்ஸ் அணியின் சட்விக் வால்டன் தெரிவு செய்யப்பட்டார். தொடராட்ட நாயகனாக மராத்தா அரபியன்ஸ் அணியின் தலைவர் கிறிஸ் லின் தெரிவானார்.

## ஐ.பி.எல்லை பொறுத்தே டோனிக்கு அணியில் இடம்

### தெரிவித்தார் ரவி சாஸ்திரி

ஐ.பி.எல். 2020ஆம் ஆண்டு பருவகாலத்தில் டோனி எவ்வாறு விளையாடுகிறார் என்பதை பொறுத்துதான் இந்திய அணிக்கு திரும்புவது குறித்து முடிவு செய்யப்படும் என ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண தொடருக்குப் பின்னர், டோனி இராணுவத்தில் பணிபுரிய விருப்பம் இருப்பதால் சிறிது காலம் ஓய்வு எடுத்திருந்தார். அவரது ஓய்வுக் காலம் முடிந்த பின்னரும் அணியில் சேர்க்கப்படாமல் உள்ளார்.


இதனால் அடுத்த வருடம் ஆஸ்திரேலியாவில் நடைபெற இருக்கும் ரி-20 உலகக் கிண்ண அணியில் அவர் விளையாடுவாரா? என்பது கேள்விக் குறியாக உள்ளது. அணி நிர்வாகம் மற்றும் முக்கிய வீரர்களிடம் இதுகுறித்து கேட்டால், அது டோனியின் முடிவு. அவரது ஓய்வு முடிவை அவர்தான் எடுப்பார் என்று தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அவர் 2020ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில் எப்படி விளையாடுகிறார் என்பதை பொறுத்துதான் அணிக்கு திரும்பும் முடிவு எடுக்கப்படும் என தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரவி சாஸ்திரி தெரிவிக்கையில்;

டோனி மீண்டும் கிரிக்கெட் விளையாடும்போது, அவர் 2020 ஐ.பி.எல். தொடரில் எப்படி விளையாடுகிறார் என்புதை பொறுத்துதான் இந்திய அணிக்கு திரும்புவது குறித்து முடிவு செய்யப்படும். இலக்குக் காப்பாளராக ஏனைய வீரர்கள் எப்படி செயற்படுகிறார்கள். டோனியின் திறமைக்குச் சவாலாக யார் இருக்கிறார்கள் என்பதை பார்க்க வேண்டும். ஐ.பி.எல். மிகப்பெரிய தொடர். ஏனென்றால் ஏறக்குறைய உலகக் கிண்ணத்துக்கான 15 பேர் கொண்ட அணியை தெரிவு செய்தபிறகு நடக்கும் இறுதித் தொடராகும்- என்றார்.

# கொர்ன்வோல்லின் சுழலில் சிக்கி நிலைகுலைந்த ஆப்கான் அணி



மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பந்து வீச்சாளர் கொர்ன்வோல் 7 இலக்குகளைச் சரிக்க ஆப்கானிஸ்தான் அணி 187 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது.

மேற்கிந்தியத்தீவுகள் - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஒரேயொரு டெஸ்ட் போட்டித் தொடர் இடம்பெற்று வருகின்றது. இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் ஆப்கான் அணி வெற்றி பெற்றது. 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தீவுகள் அணி முதலில் ஆப்கானிஸ்தான் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தனர். களமிறங்கிய ஆப்கான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சட்ரன், அகமட் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருந்தும் அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 6 இலக்குகளை இழந்து பரிதவித்தது.


மேற்கிந்தியத்தீவுகளின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஆப்கான் அணித் துடுப்பாட்ட வீரர்கள் தடுமாறினர். மத்திய, பின் வரிசை வீரர்கள் சொதப்பியிருந்தனர். தீவுகளின் பந்து வீச்சாளர் கொர்ன்வோலின் பந்து வீச்சில் ஆப்கான் அணி 7 இலக்குகளை இழந்தது. அணிசார்பில் அகமேட் 39 ஓட்டங்களையும், கம்சா 34 ஓட்டங்களையும், சஷாய் 32 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். அணி 187 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் கொர்ன்வோல் 7 இலக்குகளைச் சரித்தார். கோல்டர் 2 இலக்குகளையும், வரிக்கன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய மேற்கிந்தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பிரித்வைட், கம்வெல் களமிங்கினர். அணி 27 ஓட்டங்களைப் பெற்ற போது முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. பிரித்வைட் 11 ஓட்டங்களைப் பெற்ற போது எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். ஹோப் வந்த வேகத்திலேயே 7 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அணி நேற்றைய நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. கம்வெல் 30 ஓட்டங்களுடனும், புறூக்ஸ் 19 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்

டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடர்;

# 6ஆவது முறையாக கிண்ணத்தை முத்தமிட்டது ஸ்பெய்ன்




டேவிஸ் கிண்ண ரென்னிஸ் போட்டியின் இறுதிச் சுற்றில் கனடாவை வீழ்த்தி ஸ்பெய்ன் 6ஆவது முறையாகவும் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

டேவிஸ் கிண்ண ரென்னிஸ் போட்டியின் இறுதிச் சுற்றில் 18 அணிகள் கலந்து கொண்டு மோதின.

இதில் ஸ்பெய்னில் நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் ஸ்பெய்ன்-கனடா அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இதில் ஒற்றையர் பிரிவில் முதல் ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் ராபர்டோ பாவ்டிஸ்டா அகுட் 7:6, 6:3 என்ற செற் கணக்கில் 19 வயதான கனடா வீரர் பெலிக்ஸ் அஜிரை தோற்கடித்தார்.

மற்றுமொரு ஆட்டத்தில் முதல் நிலை வீரரான ஸ்பெய்னின் ரபேல் நடால் 6:3, 7:6 என்ற செற் கணக்கில் 15ஆம் நிலை கனடா வீரரான டெனிஸ் ஷபோவாலோவை வீழ்த்தினார்.

இதன் மூலம் ஸ்பெய்ன் அணி 2:0 என்ற கணக்கில் கனடாவை வீழ்த்தி 6ஆவது முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றியது.



# ஆர்ச்சரிடம் பகிரங்க மன்னிப்பு கேட்ட கேன் வில்லியம்சன்

மவுங்கானுய் மவுண்டில் நடந்த சம்பவத்துக்காக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சரிடம் நியூஸிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார்.

இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்தப் போட்டி முடிந்ததும் பவிலியன் திரும்பிய இங்கிலாந்து அணிக்காக விளையாடும் மேற்கிந்தியத்தீவில் பிறந்த ஜோப்ரா ஆர்ச்சரை நோக்கி ரசிகர் ஒருவர் இனவெறியுடன் அவமரியாதையாக திட்டியதாக கூறப்படுகிறது.

இது குறித்து நியூஸிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் தெரிவிக்கையில்;

நடந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதற்காக நான் நியூஸிலாந்து சார்பாக முதலில் ஆர்ச்சரிடம் மன்னிப்புக் கோருகின்றேன். இது போன்ற சம்பவம் எதுவும் இனி மீண்டும் ஒருபோதும் நடைபெறாது என நான் நிச்சயமாக நம்புகின்றேன் - என்றார்.

இதேவேளை இந்தக் குற்றத்தை செய்த ரசிகர் மைதானத்தை விட்டு உடனடியாக வெளியேறி விட்டதால் அவர் யார்? என்பதை பாதுகாவலர்களால் கண்டறிய முடியவில்லை.

நியூசிலாந்து கிரிக்கெட் சபை மைதானத்தில் உள்ள கண்காணிப்பு மறைகாணிகளின் பதிவுகளை ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட நபர் யார்? என்பதை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், ஆர்ச்சரிடம் மன்னிப்புக் கோருவதாகவும் நியூஸிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஐடியல் அக்கடமி
485, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தரம் 6 முதல் O/L வரை
கல்வியாண்டு - 2020
ஆரம்பம் 30.11.2019 சனி 3.00 Pm
தமிழ்மொழி மூலம் 6 - 11
ஆங்கில மொழி மூலம் 6, 7, 8

ராசி
திகதி 27.11.2019
வெற்றி வாரம் 2690
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 19 39 42 62
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 754, 332/=
28.11.2019 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

J 03 20 32 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,405,685/-
சீட்டிழுப்பு இல. 525
திகதி 2019 நவம்பர் 26
வர்ணம் இளஞ்சிவப்பு
செவ்வாய்

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 804
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.11.27
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 68,061,725/-
வெற்றி இலக்கங்கள் 21 43 73 74
ஆங்கில எழுத்து C

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3267
திகதி: 2019.11.27
ஊதா புதன்கிழமை
சுப்பர் தஹஸ்
விசேட இலக்கம் 1680
வெற்றி இலக்கங்கள் 06 14 33 61
ஆங்கில எழுத்து D
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 30,000,000/-

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 300
சீட்டிழுப்பு திகதி 27.11.2019 நீலம்
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 13 14 15
விதி எண் 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 47, 565, 324/=
29.11.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.